ரிஜிஸ்தர் நெ. M. 1608. தனிப் பிரதி அணா 2.



புதுப்பேட்டை வாரப் பத்திரிகை. சென்னை.

கோத்து 3.] 1925ஹு பிப்ரவரிமீ 7உ சனிக்கிழமை. [மலர் 43.

காலஞ்சென்ற சங். பாரேர் சுவாமிகள்.

கூடலூர், மஞ்சகுப்பம், அர்ச். சூசையப்பர் கலாசாலையில் வெகு காலமாகப் போதகாசிரியராக இருந்த சங். பாரேர் சுவாமிகள் இருதய நோயால் பெங்களூர் அர்ச். மார்த்தம்மாள் வைத்தியசாலையில் சென்ற மாதம் 28-ந்தேதியாகிய புதன்கிழமை மரண மடைந்ததாகக் கேள்விப்பட்டு மிக வாய்த் துக்கிக்கிறோம். சிறுவயதிலிருந்து அந்த நல்ல குருவானவரை யறிந்து, அவருடைய ஞானவாளுகையில் கல்விபயிலும் பாக்கியம் பெற்ற நாம் அச்செய்தியைக் கேள்விப்பட்டு மனம் வருந்தாமல் இருக்கக் கூடுமா? மேலும் அவருடைய குணாதிசயங்களையுங் கல்வித்திறமை பாண்டித்தியத்தையு மறிந்த நாம் அவரைப்பற்றித் தலையங்கம் எழுதாமலிருப்ப தெங்ஙனம்? ஆகவே அந்தப் பெரியாருடைய ஜீவிய சரிதையை ஈண்டு ஒருவாறு சுருக்கி வரைந்து, அவருடைய குணமகத்துவத்தை எடுத்து இயம்புவோம். பக்திமான்களுடைய புனித சரிதையை வாசித்தல் மனிதருக்கு நன்மை பயக்குமன்றோ?

காலஞ் சென்ற சங். பாரேர் சுவாமிகள் ஜெர்மனிக்குச் சொந்தமா யிருந்து இப்போது பிராஞ்சு தேசத்தோடு சேர்ந்திருக்கும் அல்சாஸ் லொரேன் என்னும் மாகாணத்தின் தலை நகராகிய ஸ்ட்ராஸ்பர்க் என்னும் ஊரில் 1862-ம் வருஷத்தில் பிறந்தார். "விளையும் பயிர் முளையில் தெரியும்." என்பது போல் இளம் பாரேர் சிறுவத்திலேயே பக்தி மார்க்கத்தைக் கடைபிடித்து அந்நகரில் அக்காலத்திலிருந்த குருமடத்தில் (இப்போது அக்குருமடம் சர்வகலாசாலையாய் விளங்குகிறது.) கல்வி பயின்றார். அவர் கல்வித் துறையில் இளம்பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்தேறி வருகையில், தேவ அழைப்பு அவர் செவியிற்பட, அதற்கிணங்கிப் பாரிஸ் நகரின் அன்னிய போதகர் சபையைச் சேர்ந்தார். அவ்வாறு சேர்ந்திராவிட்டால், பிற்காலத்தில் ஏற்பட்ட சர்வகலாசாலையில், அவரோடு படித்த மாணவர்கள் கல்விமான்களாய் ஆசிரியர் பதவி பெற்று விளங்கியது போல, சங். பாரேர் சுவாமிகளும் சிறந்த ஆசிரியராகி அக்கலாசாலைக்கே ஓர் அரிய ஆபரணமாய் விளங்கி யிருந்திருப்பார் என்பது திண்ணம். அவரோடு படித்த மாணவரிற் சிலர் ஆசிரியர் பதவி பெற்றுக் கடைசிவரையில் தவறாமல் அவருக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தனர் என்றால், அவர்களுக்கு நமது பெரியாரிடம் எவ்வளவு நல்ல மதிப்பிருந்ததெனத் தெரிகிறதல்லவா?

தேவ அழைப்பு அவருக்குண்டான விதத்தைப்பற்றி நாம் படித்த கலாசாலையில் மாணவர் பேசிக் கொள்ளும் சம்பவம் ஒன்றுண்டு. அதாவது ஒரு நாள் அவர் மற்ற மாணவரோடு உலாவப் போயினர். மரங்களடர்ந்த வனத்திலே மாணவர் விநோத விளையாட்டை நாடிப் பல திக்குகளுக்கும் சென்றிருக்கையில் ஏகாந்தத்தை இளமையிலேயே நாடிய இளம் பாரேர் தனியாய் விடப்பட்டார். அவர் எதையோ சிந்தித்துக் கொண்டு போகையில் ஒரு பழங் கல்லறை அவர் கண்ணுக்குப் புலப்பட்டதாம். அதன் மேல் "இன்றைக்கென் முறை நாளைக் குன் முறை" யென எழுதி யிருக்கக் கண்டு, அங்கேயே நின்று சற்றே சிந்தனையிலாழ்ந்தார். பின்னர் அவ்விடத்தை விட்டகன்று பிள்ளைகளோடு சேர்ந்து மடத்துக்குப் போய் தன் வேலையை எப்போதும்போல் கவனித்து வந்த போதிலும், அவர் அடவியிற் கண்ட வசனம் அவர் மனதிற் சதா குடி கொண்டு அவரை விட்டகலாமலிருந்தது. இதுவே தேவ அழைப்பின் அடையாளமெனக் கொண்டு அவர் குருத்துவத்தைத் தெரிந்து கொண்டார் எனச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவர் துறவறத்தை நாடிப்போகையில் ஓரிடையூறு நேர்ந்தது. அவ்விடையூறை யவர் வெல்ல எடுத்த உபாயம் விநோதமானது. ஜெர்மன் தேசச் சட்டப் பிரகாரம் குடிகளுக்குள் ஒவ்வொரு வாலிபனும் குறிக்கப்பட்ட வயது வந்ததும் கட்டாயம் பட்டாளத்தில் சில வருஷங்கள் சேவை செய்ய வேண்டுமென்றிருந்தது. அதற்கு நமது சுவாமியார் தப்புவ தெங்ஙனம்? பட்டாளத்தில் சேரு முன் ஒருவன் சேரத் தகுந்த அவயவ பல முடையவனா என்று வைத்தியர்கள் பரீக்ஷை செய்வார்கள் என்று அவருக்குத் தெரியும். ஆகவே அவர் மந்தப் பார்வை யுடையோர் வாங்கி யணியும் மூக்குக் கண்ணாடி யொன்றைச் சம்பாத்தித்து அதைக் கொஞ்ச காலம் போட்டுக் கொண்டிருக்கவே, அவர் கண்ணுங் கெட்டுப் போய்விட்டது. பின்னர் வைத்தியர் பரீக்ஷை நடக்கையில் அவருக்குக் கண் பார்வை மட்டென்றும், அவர் பட்டாளத்தில் சேர அருகரல்லவென்றும், அவரை விலக்கி விட்டார்கள். குருடன் கேட்பதெல்லாம் கண் தானே; நமது சுவாமியாருக்கு வேண்டியதெல்லாம் பட்டாளத்தில் சேராமலிருக்கதல்லவா? [illegible] ச்சி பலனளித்த[illegible] வனுக்குத் தோத்தி[illegible] மடத்துக்குச் சென்றா[illegible]

அங்கே வேதம் தர்க்கம் முதலிய சாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்றுக் குருப்பட்டம் பெற்று, இந்தியாவுக்கு 1886-ம் வருஷம் அனுப்பப் பட்டார். அவர் புதுவை வந்ததும், குருமடத்தில் பிள்ளைகளுக்கு வேதநூல் கற்பிக்கும்படி நேமிக்கப் பட்டார். அக்காலத்தில் சீர்மையிலிருந்து புதிய குருக்கள் வந்தால், அவர்களை வேத சாஸ்திரத்தில் சோதிப்பது வழக்கம். அப்படியே நமது பாரேர் சுவாமியாரையும் அச்சமயம் "சம்பா கோவில்" பங்கு சுவாமியாராயிருந்து பிற்காலத்தில் கும்பகோண மேற்றிராணியாரான காலஞ் சென்ற பொத்தரோ ஆண்டவர் வேத சாஸ்திரத்தில் பரீக்ஷை செய்து பார்த்து, அவர் அத்துறையில் ஆழ்ந்த அறிவுடையவரெனக் கண்டாராம். ஆனால் புதுவையின் சீதோஷ்ண நிலைமை அவர் தேகத்துக் கொத்துக்கொள்ளாமல், சீத பேதியால் உபாதைபடவே, அவரைக் கூடலூருக் கனுப்பினார்கள். அங்கே அவர் குணமடைந்ததைக் கண்டு, கலாசாலைத் தலைவராயிருந்து காலஞ் சென்ற சங். தார்பஸ் சுவாமியார் அவருடைய ஆழ்ந்த அறிவு தனது கலாசாலைக்குப் பெரிதும் பயன் படுமெனக் கருதி, மேற்றிராணியார் உத்திரவு பெற்று அவரைத் தன்னிடத்திலேயே நிறுத்திக் கொண்டார். அப்போதுதான் அக் கலாசாலை உயர்தரக் கலாசாலையானது. உயர்தர வகுப்புக்களைப் பார்க்கும்படி நமது பாரேர் சுவாமியார் ஆசிரியராக நேமிக்கப் பட்டார். அவர் கல்வி கற்பித்த விதமும் மாணவர் மட்டில் விசேஷமாய்க் கத்தோலிக் மாணவர் மட்டில், காட்டிய பரிவும் ஊக்கமும் அவர் மேற்கொண்ட வேலையில் அவருக்கு நல்ல வெற்றியைத் தந்தன. அவரைப் போலும் சிறந்த

(சென்னை.)

ஆசிரியர் கிடைப்பதருமை யென்று சொல்லும்படி யவ்வளவு நேர்த்தியாக அவர் கல்வி கற்பித்தார்.

ஆங்கில பாஷையைச் சொற்ப காலத்தில் நன்றாய்க் கற்றுணர்ந்து, அப்பாஷையிலேயே கணிதம், மானிட தேக சாஸ்திரம், சரித்திரம் முதலியவற்றைப் போதிக்கத் தொடங்கினது யாவர்க்கும் ஆச்சரியமாயிருந்தது. அவர் உட்பிள்ளைகளுக்கு மிக்க உதவியா யிருந்து, பிரத்தியேகமாகக் கல்வி போதித்து, தனது போதனு சக்தியைச் சோதித்துப் பார்த்தாராம். அவ்வாறு அவரிடம் பயின்ற கத்தோலிக் மாணவர்களில் இப்போது உயிரோடிருப்பவர்கள் சென்னை சட்டசபை அங்கத்தினரும், கல்வி மந்திரியின் காரியதரிசியுமாகிய ஸ்ரீமான் அற்புதசாமி உடையாரும், அர்ச். கபிரியேல் பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமான் ஆரோக்கியசாமி பிள்ளையும், கூடலூர் தாசில்தார் ஸ்ரீமான் சூசை பிள்ளையுமாம். இன்னும் அவருடைய முதல் மாணவர் என்க. உடற் கூற்று சாஸ்திரம் கற்பிக்கத் தானே "மானிக்கின்" என்னும் உடற் கூற்றுச் சிலையைத் தனது சொந்த செலவில் வாங்கினதுமன்றி, சனிக்கிழமைகளில் மாணவரை வரச் சொல்லி விசேஷ பாடங்கள் கற்பிப்பதோடு, ஒவ்வொரு மாணவனும் தான் கற்பித்ததை உணர்ந்தானு என்று தனித் தனியே கவனிப்பது வழக்கம். அவரைப்போலும் மாணவருடைய [illegible] யறிந்து அதற்கேற்றாப்போல் [illegible]க்கும் ஆசிரிய[illegible] அவரிடங் கல்வி [illegible] போதித்த சாஸ்திரங் [illegible]படும்போது நூற்றுக்கு எண்பது எண்பத்தைந்து பேர் தேறுவது வழக்கம்.

அவர் ஆசிரியர் வேலை செய்ததோடு நில்லாமல், உட் பிள்ளைகளைப் பராமரிப்பதிலும் அவர்களுடைய ஞான காரியங்களைக் கவனிப்பதிலும் தனது வாணாளைப் போக்கினார். பிள்ளைகளுடைய சரீர சம்பந்தமான ஆவசியகங்களிலும் மிகுந்த பரிவு காட்டி அவர்களைச் சன்மார்க்கத்தில் நடத்துவதில் கண்ணுங் கருத்துமா யிருந்து அல்லும் பகலும் உழைத்து வந்ததற்கு அவ்வுத்தமரிடம் பழகினவர்களே சான்று. அவர் சபைக் கூட்டங்களிலும், ஒடுக்க காலத்திலும் செய்து வந்த பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் இவ்வுலகில் கிடைக்கரும் ஞான விருந்தென்னலாம். அவர் ஞானப் பிரசங்கங்கள் செய்யும்போது அவர் வாயினின்றுங் கடல் மடைத்திறந்தாப் போல் வரும் அடுக்கு வசனங்களும், அவருடைய பக்தியொளி வீசும் முகார விந்தத்தில் தோன்றும் உருக்கம் நிறைந்த பார்வையும், ஆத்தும ஈடேற்ற ஆவலும் அவரை விசேஷ தேவ வரம் பெற்ற துறவியெனக் காட்டின. அவர் கொடுத்த ஞான ஒடுக்கங்களுக்குச் சென்றவர்கள் அடைந்த அமைதி நிறைந்த ஞான ஆறுதலே அவர் அவர்களிடம் எதிர் பார்க்கும் கைம்மாறெனச் சொல்லிக் கொள்வார்கள். பிற்காலத்தில் அவர் தமிழ் பாஷையையும் நன்றாய்க் கற்றுணர்ந்து அப்பாஷையில் பிள்ளைகளுக்கு ஞான போதகமும் செய்து வந்தார். அக்கலாசாலையில் பழைய மாணவர் சங்கமொன்று ஸ்தாபிக்கவும், கிறீஸ்துவ பழைய மாணவர்க் கென்று ஞான ஒடுக்கங்கள் நடத்தவும் பெரிதும் முயன்று வந்தார். முன்னையது சீக்கிரம் கை கூடுமெனத் தெரிகிறது. பின்னைய காரியம் என்ன காரணத்தாலோ கொஞ்ச காலம் நடந்து பின்னர் கைவிடப்பட்டது.

சங். பாரேர் சுவாமியாருடைய ஊழியம் கலாசாலை யளவில் நிற்காமல் இராஜதானி முழுமைக்கும் பயன்படக் கூடியதாயிற்று. இந்திய கத்தோலிக் ஜன சமூகம் முன்னேறுவதற் கின்றியமையாத சாதனம், அவர்களுடைய லௌகீகக் காரியங்களைக் கவனிக்கக் கூடிய பொதுச் சங்கமென்றுணர்ந்து, சில பெரிய மனுஷரைக் கலந்து கொண்டு, தென்னிந்தியா கத்தோலிக் இந்தியர் சங்கத்தை ஸ்தாபித்தார். அதற் கிடையூறாய் ஏற்பட்ட எதிர்ப்புகளைத் தனது வாக்குச்சாதுரியத்தாலும் தன்னலப்பரித்தியாகத்தாலும் வென்று, அதை ஸ்திரமாய் ஸ்தாபித்துப் பொருளுதவி செய்து, அதற்காக வெகு ஊக்கத்துடன் உழைத்து வந்தார். பிற்காலத்தில் அவருடைய கொள்கைகளுக்கும் அங்கத்தினர் கொள்கைகளுக்கும் ஏற்பட்ட வித்தியாசங்களை முன்னிட்டு, அவர் சங்க விஷயங்களைக் கவனிக்க முடியாமலிருக்க நேர்ந்தது மிக்க விசனத்துக் குரியதாம். ஏனெனில் அவர் சங்கத்தினின்றும் விலகிக் கொண்டதும் அச்சங்கம் க்ஷீணதசைக்கு வந்ததற்கோர் காரணமென்று சொன்னாலும் பொருந்தும். அவர் கத்தோலிக் இந்தியர் சங்கத்தை ஸ்தாபித்து செய்து வந்த உன்னத வேலையைக் கொண்டே அவர் இந்திய கத்தோலிக்கரின் முன்னேற்றத்தில் எவ்வளவு அக்கரை பூண்டொழுகினர் என்று தெரியவரும். ஆகவே தென்னிந்தியா கத்தோலிக் இந்தியர் சங்கம் அவரிடம் நன்றி காட்டுவதற்கடையாளமாய்க் கூடிய சீக்கிரத்தில் ஒரு பொதுக்கூட்டம் வைத்து, அவர் மரணத்தால் இந்திய கத்தோலிக்கருக் கேற்பட்டிருக்கும் நஷ்டத்தையும், அநுதாபத்தையுந் தெரிவித்துக் கொள்ள முந்துவார்கள் என்று நம்புகிறோம்.

குருக்களுக்குரிய உத்தம இலக்ஷணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்று யாவருக்கும் மேல் வரிச் சட்டமாயிருந்த உத்த மோத்தம முனிபுங்கவர் தமது லௌகீக அலுவலை முடித்து, ஆண்டவர் அவருக்காகச் சித்தப்படுத்தியிருந்த மோட்ச சம்பாவனையைப் பெறப் போய் விட்டார். அவருடைய பழைய மாணவரும், நண்பர்களும் மற்றும் அவரை யறிந்த தென்னிந்திய கத்தோலிக்கரனைவரும் அதற்காக பெரிதும் வருந்திக் கலங்குகிறார்கள் என்பது திண்ணம். அவருடைய பக்தி விநயம் சாமான்யமானதல்ல. அவரோடு நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்றோர் அவரை யோர் அர்ச்சியசிஷ்டவரென்றே சொல்வார்கள். அவர் பிள்ளைகளின் மேல் வைத்திருந்த ஆர்வமே அவரை அர்ச். சூசையப்பர் கலாசாலையை விட்டு வெளியே போகாமல் தடுத்தது. அவர் சர்வகலாசாலை யொன்றிலிருந்திருந்தால், அவருடைய புகழ் குன்றின்மேலேற்றிய விளக்கைப் போல் துலங்கியிருக்கும். ஆனால் அவர் ஏகாந்தத்தை நாடித் தாழ்மையில் ஜீவிக்க விரும்பிய துறவியாதலால், அவர் உலகக் கீர்த்தியைக் கவனியாமல் சர்வேசுரனுடைய திருச்சித்தத்துக் கமைந்து பெரியோரால் தமக்களிக்கப்பட்ட கடமைகளை நுணுநுணுக்கமாய்ச் செலுத்துவதில் தமது வாணாளைச் செலவிட்டார். அவருடைய பக்தியொழுக்கத்தையும், பரோபகாரச் சிந்தையையும், பரிசுத்த சீவியத்தையும் பரித்தியாகத்தையும் நினைக்க நினைக்க அவரை இழந்ததால் எமது மனதிற் பெருகும் துக்கத்தால் தடைபட்டு இதற்கு மேல் ஒன்றும் எழுத முடியவில்லை. அவர் தேவவரம் பெற்ற பரிசுத்த வாளர் ஆனமையால், அவர் இப்போது மோட்சத்தில் இருக்கிறார் என்னும் நம்பிக்கையுண்டு. ஆயினும் இதைக் கண்ணுறும் நேயரனை வரும் அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். மேலும் அவருடைய பழைய மாணவரில் அநேகர் வசிக்கும் சென்னை நகரில் பழைய மாணவர் தங்கள் அனுதாபத்தையும் விசனத்தையுங் காட்ட ஒரு கூட்டம் வைத்து தங்கள் உபகாரியும் அன்பருமாகிய சங். பாரேர் சுவாமிகளுடைய ஞாபகச் சின்னமொன்று ஏற்படுத்த முன்வருவார்களாக. அவருடைய மரணத்தால் வருந்தும் அர்ச். சூசையப்பர் கலாசாலைத் தலைவர்க்கும் மற்ற குருமாருக்கும் நமது துக்கத்தையும் அனுதாபத்தையும் நமது பத்திரிகையின் பேரால் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சங். பாரேர் சுவாமியாருக்கு நமதாண்டவர் நித்திய மோட்ச இளைப்பாற்றியைக் கட்டளை யிடுவாராக!

சட்டசபைத் தலைவர்.

சென்ற செவ்வாய்க்கிழமை யன்று சென்னை சட்டசபை கூடியது. அரசியல் திருத்தச் சட்டத்தின்படி நடக்க வேண்டிய அக்கிராசனாதிபதி தேர்தல் நடைபெற்றதில் தீவான் பஹதூர் சுவாமி கண்ணுப் பிள்ளையவர்களே தேர்ந்தெடுக்கப் பட்டாரெனக் கேள்விப்பட்டு மிகவா யானந்திக்கிறோம். தீவான் பஹதூர் அவர்கள் தமது கல்வி கேள்விகளால் அப்பதவிக் கேற்றவர் என்பதை அவர் எதிரிகளும் ஒத்துக் கொள்வார்கள். அவர் இங்கிலாந்துக்குச் சென்று பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை நேரிற் பார்த்துக் கண்டறிந்ததாலும், சென்னை சட்டசபையை ஒரு வருஷ காலம் அவரே நடத்தி வந்திருப்பதாலும், அவருக் கனுபோகம் அதிகம். அவர் அப்பதவிக்கு முற்றும் லாயக் குடையவர் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். பாராளுமன்றத்தில் நடப்பதுபோல அவரை ஏக மனதாய்த் தெரிந்து கொண்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும். இனியாகிலும் அவ்வாறு நடக்குமென நம்புகிறோம். தீவான் பஹதூர் சுவாமி கண்ணு பிள்ளையவர்கள் தனது தலைமைப் பதவியைச் சட்டசபையின் கௌரவத்திற் கேற்ப நடுவு நிலைமை குன்றாமல் தாங்கி நடத்துவார் என்று நிச்சயமாய் நம்புகிறோம். அவருக்கு நமது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சிங்கள டைப் ரயிட்டர்.

சில மாத காலமாய் சீர்மையிலிருந்து வந்த F. B. டிமெல் என்பவர் சிங்களம் இங்கிலீஷ் இரண்டும் டைப் அடிக்கக் கூடிய டைப் ரயிட்டிங் மெஷின் கண்டு பிடித்திருக்கிறாராம்.

ஐவிரல் கிச்சிலி.

ஜப்பானில் ஒரு வகைக் கிச்சிலியிருக்கிறது: இது ஐந்தடிக்கு மேல் வளர்வதில்லை; ஐந்து விரலுள்ள (மனிதர்) கையைப்போலவே இதன் பழங்கள் இருக்கின்றனவாம்.

குடும்ப நிர்வாகம்.

பிள்ளைகளைப் படிப்பித்தல்.

(தொடர்ச்சி)

பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டிய வேதப்படிப்பினை, சன்மார்க்கப் படிப்பினை ஆகிய இவற்றைப்பற்றி இனிப்பேசுவோம். சர்வேசுரனை யறிந்து, அவரோடு ஒன்றித்திருக்க முயற்சி செய்வதே தன் கடைசி நோக்கம் எனக் கொண்டு, நித்தியத்துக்கும் அவரோடு ஒன்றித்திருப்பதற்கே ஒவ்வொரு ஆத்துமாவுஞ் சிருஷ்டிக்கப்பட்டது. அவரே நமக்குத் திருவாய் மலர்ந்தருளிய காரூதியின்படி தேவனை அறியும் அறிவே வேதப் படிப்பினையின் முதற் படியாம். மனித சிரிஷ்டிப்பும், பாவஞ் செய்ததும், இரக்ஷிக்கப்பட்டதும், திருச்சபை யுண்டானதுமான சரிதை, அதாவது, ஒரே வார்த்தையில், மனிதனிடம் சர்வேசுரன் நடந்து கொண்ட விதமும், மனிதனுக்குச் சர்வேசுரனிடம் உள்ள சம்பந்தமும் அதில் அடங்கியிருக்கின்றன. இதுவே விசுவாசப் படிப்பினை. ஆனால் மனிதனுடைய தேவ ஞானம் கனி கொடாததாயும் சந்தேகப்படத் தக்கதாய் மிருத்தலாகாது. அது சர்வேசுரனை நேசிக்கவும், அவரை யடையவும் மனிதனை நடத்த வேண்டும். மனிதர் சன்மார்க்கத்துக் கென்று அவர் இயற்றிய சட்ட திட்டங்களை நுணு நுணுக்கமாய் அநுசரிப்பதால் இது நிறைவேறும். இந்தச் சட்டங்களையும், அவைகளை யனுசரிக்கும்படி நம்மைத் தூண்டும் நோக்கத்தையும் விவரமாய் அறியும் ஞானமே சன்மார்க்கப் படிப்பினையாகும். நம்முடைய சொந்த பலத்தினாலேயே தேவன் நம்மிடம் எதிர் பார்ப்பதனைத்தையும் செய்யக் கூடுமானால், அவரன்றி நம்மா லொன்றும் ஆகாதென்றும், அவருக்கு நம்மேல் முழு ஆதிக்கம் உண்டென்றும் வெளியாங்கமாய் நாம் ஆராதனை செய்து காட்டுவது அனாவசியமாயிருந்தால், மேற்கொண்டு நாம் அதிகம் ஒன்றும் படித்தறிய வேண்டியதில்லை. ஆனால் நாம் சர்வேசுரனை யணுக எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும், நமக்குத் தேவ உதவி அவசியமாய் வேண்டியிருக்கிறது. நாம் நமது பரித்தியாகத்தால் அவருக்கு ஆராதனை வணக்கஞ் செய்ய கடமைப் பட்டிருக்கிறோம். ஆகவே அவர் தமது மட்டற்ற இரக்கத்தால் கொடுத்தருளிய தெய்வீக உதவியைப் பெறும் வழி வகைகளையும், அவருடைய் உன்னத மகத்துவத்துக்கும் நம்முடைய நிலைமைக்குந் தகுந்தாப்போல் அவருக்கு நாம் எத்தகைய பரித்தியாகம் செய்வதென் றுணருமாறு அவர் செய்துள்ள உயரிய பரித்தியாகத்தின் தன்மையையும் அறிதல் அத்தியாவசியம். அப்படியானால் தேவபலி, தேவத்திரவிய அநுமானங்கள், ஜெபம், தேவ வரப்பிரசாதமடையும் உபகரணங்கள் முதலியவற்றை யறியும் அறிவே வேதப்படிப்பினையின் மூன்றாவது பாகமாகும்.

சாதாரணமாய் ஒரு குழந்தை கற்கவேண்டிய ஞானோபதேசத்தின் சுருக்கத்தையே நானிங்கு குறிப்பிட்டிருக்கிறேன் என்பதை இதை வாசிப்போர் தெரிந்து கொண்டிருக்கலாம். மெய்யாகவே சொல்ல வேண்டுமானால், நன்றாய்ப் படித்துக் கண்டறியப்படும் ஞானோபதேசம் வேதஞானம் நிறைந்த பொக்கிஷமாகும். அதனைப் படிப்பதால் முதியோருங் கல்விமான்களுங் கூடப் பெரிதும் பயனடைவார்கள். புத்தியானது அதன் வெளிச்சத்துக் கேற்பப் படித்தறிகிறது ; நமக்கு வயதாக வயதாக இந்த வெளிச்சம் அதிகரிக்கிறது, அதிகமாக வேண்டும். ஆகவே நாம் வளர்ந்து பெரியவர்களானபின், அதே ஞானோபதேசந் தானே யென்று, அதனைப் புறக்கணித்தல் அல்லது அசட்டை செய்தல் கூடாது. அதனிற் காணுஞ் சொற்கள் புதியனவல்லவென்பது வாஸ்தவமே, ஆனால் அவற்றின் பொருளும், அவற்றால் நமக்குக் கிடைக்கக் கூடிய நன்மையும் ஆத்தும ஞான வளர்ச்சிக்குத் தகுந்தாப்போல் வளர்ந்து கொண்டே போதல் வேண்டும். ஆயினும் ஞானோபதேசம் பிள்ளைகள் புத்தகம் என்றே அநேகர் நினைக்கிறார்கள் ; பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு அதைக் கையிலெடுக்க நினைப்பவரோ வெகு சிலர். பிள்ளைகளுக்கு முதலாய் ஞானோபதேசம் என்றால் அவ்வளவாய்ப் பிடிக்கிறதில்லை. ஒரு குழந்தைக்கு வெகுமதியாக ஞானோபதேசப் புத்தகமொன்றும், படங்கள் நிறைந்த கதைப்புத்தகமும் கொடுத்து, கொஞ்ச காலத்துக்குப் பிறகு அவற்றை வாங்கிச் சோதித்துப் பார்த்தால், முன்னைய புத்தகம் அப்படியே புதியதாயிருக்க, பின்னையது அடிக்கடி உபயோகிக்கப் பட்டமையால் அழுக்கடைந்திருக்கக் காணலாம். இதற்குக் காரணமென்ன ? குழந்தைக்கு ஞானோபதேசம் விளங்கவில்லை ; பாராமல் படிக்க வேண்டியிருக்கிறது ; அது படமும், கதையுமில்லாப் பாடப் புத்தகம் என்பதே அதன் கொள்கை. புத்தகத்தின் மேலுரை முதலாய் அதன் கவனத்தைக் கவர்வதாயில்லை. கேள்வியும் பதிலுமாக வரையப்பட்டிருப்பதும் அதன் ருசியைக் கெடுக்கும் காரணமா யிருக்கிறது. அதனால்தான் பிள்ளைகளுக்கு ஞானோபதேசப் புத்தகத்தின் மேல் பிரியமில்லை ; மற்ற புத்தகங்களோடு புத்தகமாய் அதைப் போட்டு வைத்து, பாடத்தைப் படிக்கும் போது மட்டும் அதை யெடுக்கிறார்கள்.

குழந்தையின் வேதப் படிப்பினைக் கடிப்படை ஞானோபதேசம். மேற்கூறிய மூன்று வித ஞானமும் வருவதற்கு நன்றாய்ப் படித்தறிந்திருக்க வேண்டும். ஆகவே பிள்ளைகளுக்கு ஞானோபதேசங் கற்பிப்பதில் அக்கரையுள்ளவர்கள், அதனை ருசிகர முள்ளதாக்கி யூட்ட வேண்டும் ; கஷ்டமான மொழிகளைப் பிரகாசம் பொருந்திய படங்களாகக் காட்ட வேண்டும் ; கேள்விகளின் பதில்கள் சன்மார்க்கத்துக் கடுத்த கதைகளின் நீதிகளாயிருத்தல் வேண்டும். காவலான சம்மனசுக்கள் நல்ல பிள்ளைகளா யிருக்கும்படி போதிப்பது போல் இருத்தல் வேண்டும். பிள்ளையை நேசிக்கும் பெற்றோர் இவ்வாறு செய்தால், நற்பலன் கிடைக்கும் என்பது திண்ணம் ; பிள்ளை ஞானோப தே[illegible] [illegible] பெ[illegible] தைச் சாதித்தது போலாகும் ; ஏனெனில் நாம் சிறுவத்தில் கற்ற விஷயங்களும் அநுபவித்த சந்தோஷங்களும் நமது உயிருள்ள அளவும் நமது ஞாபகத்தை விட்டு விலகுவனல்ல. பாவத்தினாலும் அழிக்க முடியாத அதிகாரத்தை அவை நமது வாழ்க்கையின் மேல் செலுத்துவனவல்ல. மனிதரை இரக்ஷிக்க வந்த நமதாண்டவர் பாதக மனிதரால் எவ்வாறு துன்புறுத்தப் பட்டார் என்று மிக்க உருக்கத்துடன் தகப்பனாகிய நீ கற்பிக்கும்போது உன் மகன் அதைக் கவனத்துடன் கேட்கிறான். பிற்காலத்தில் திருப்பாடுகளின்மேல் உனக்கிருந்த உருக்கம் நிறைந்த நேசம் உன் மகனிடம் இல்லாமற் போகுமா ? சிலுவையடையாளத்தின் மேல் அவனுக் கிருக்கும் பட்சமும் நேசமும் வர வர வளர்ந்து கொண்டே வரும். இப்படியே பிள்ளைகளுக்கு நமது வேத சத்தியங்கள் மேல் இருக்க வேண்டிய பிரியம் நாளடைவில் உறுதிப்பட்டு, அதன் விசேஷப் பொருளை யறியும் ஆவல் அதிகரித்து அளவற்ற ஞான நன்மைகள் விளைக்கும்.

"ஞாயிற்றுக்கிழமைகளில் ஞானோபதேசமிருக்கிறதே, அதற்கு என் மக்கள் போனால் போதாதா ? எனக்கெவ்வளவோ வேலை யிருக்கிறது. உபாத்தியாயர் வேலை செய்ய என்னால் முடியுமா ?" என்று சொல்

J. M. J.

Madras,
4th February 1925.

DEAR SIR,

I beg to acknowledge the receipt of the copy of your paper "Podhu Nalam" containing your kind greeting and good wishes on my arrival [illegible] this town, and I gladly take this opportunity of wishing your paper every prosperity while expressing the desire that you may always adhere to the high ideals which have guided you, of unswerving loyalty to Church and State while striving to always better the condition of your dear people.

Believe me, dear Sir,
Yours sincerely in Christ,
(Sd.) ✠ ALEXIS HERNY MARY LEPICIER O.S.M.,
Archbishop of Tarsus,
Visitor Apostolic to India.

சென்னையில்

மே. த. அப்போஸ்தலிக் தரிசிகர்.

சென்ற மாதம் 31-ந்தேதி சனிக்கிழமை காலை மேன்மை தங்கிய அப்போஸ்தலிக் தரிசிகராகிய மிகவும் வந்திக்கத்தக்க லெப்பீசியே ஆண்டவரவர்கள் புதுவையினின்றும் சென்னை வந்து சேர்ந்தார். அவர் போட்மெயிலில் வருவாரென்று அநேகர் நினைத்து ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். ஆனால் ஆண்டவரவர்கள் அதிகாலையில் வரும் வண்டியில் வந்து விட்டபடியால், ஜனங்கள் ஏமாந்து வீடு திரும்பினர். ஆனால் ஏற்கெனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி, அன்று மாலை சென்னை பீப்பிள்ஸ்பார்க்கு, தென்னிந்தியா விளையாட்டுச் சங்க நிலத்தில் ஆண்டவரவர்களின் வரவேற்புக் கொண்டாட்டம் நிறைவேறியது. நான்கு மணி முதற்கொண்டு சென்னையில் பல பாகங்களிலிருந்தும் கிறீஸ்துவர்கள் பத்தி பத்தியாய்க் கூட்டங் கூட்டமாய் பீப்பிள்ஸ்பார்க்கை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். சுமார் ஐந்து மணிக்கு அங்கே பார்க்கும்போது ஜனங்கள் ஆயிரக்கணக்காய்க் கூடி யிருந்ததுமன்றி, சென்னையிலுள்ள கத்தோலிக் பள்ளிக்கூட மாணவர், மாணவிகளெல்லாம் கையில் கொடி ... கொண்டு வரிசை வரிசையாகத் ... இடத்தில் ... ஆண்டவரவர் ...கப்பட்ட இடத்தில் ...லங்கரிக்கப் பட்டிருந்த பந்தல் மேடையில் சென்னை, மைலாப்பூர் ஆகிய இரண்டு ஆதீனங்களைச் சேர்ந்த குருமார் அநேகரும் சில பிரபலஸ்தரும் அமர்ந்து ஆண்டவரவர்களின் வரவை எதிர்பார்த்திருந்தனர். அப்போது மே. த. ஆண்டவரவர்களும், சென்னை அதிமேற்றிராணியாரும் பாண்டு வாத்தியம் முழங்க, சாரணச் சிறுவர் அணி வகுத்து நிற்க மோட்டார் ரதத்தில் வந்திறங்கி ஜனங்களை யாசீர்வதித்துக் கொண்டே மேடை மீதேறி ஆசனத்தமர்ந்தனர். பின்னர் சென்னை யாதீன விக்கர் ஜெனரல் அதி சங். கிரெயில்மன்ஸ் சுவாமியார் ஆங்கிலத்திலும், அதி சங். மோன்சிஞ்ஞோர் ஜான் சுவாமியார் தமிழிலும், ஸ்ரீமான் மல்லவரப்பு பாப்பைய நாயுடு தெலுங்கிலும் முறையே வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசித்து, சென்னை மேற்றிராசனக் கிறீஸ்துவர்கள் பேரால் நமது பரிசுத்த பிதாவின் தூதுவருக்கு நல் வரவு கூறி வாழ்த்தினார்கள். அவற்றிற்கு விடையாக ஆண்டவரவர்கள் அரியதோர் பிரசங்கம் செய்தார்கள். பின்னர் மேடை மீதிருந்தவர்களை ஆண்டவரவர்களுக்குப் பரிச்சயம் செய்து வைக்கப்பட்டது. அதன் பிறகு பள்ளிச் சிறுவர்கள் தங்களிடத்திலிருந்து ஆண்டவரவர்கள் முன்னிலையில் வரிசையாக வலம் வந்தனர். இது முடிந்ததும் அந்தப் பிள்ளைகள் முன்னிருந்த விடத்திலேயே வந்து நிற்க, ஆண்டவரவர்கள் தமது மோதிர முத்திக்காக மேல் விழுந்து வரும் ஜனக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு, பிள்ளைகள் நிற்குமிடத்துக்கு வந்து அவர்களுக் காசி கூறி, அவர் விஜயத்தின் ஞாபகமாக அடுத்த திங்கட்கிழமை சென்னை நகர் கத்தோலிக் பள்ளிக்கூடங்களுக் கெல்லாம் வாவு நாள் என்று மொழிந்து, கரகோஷத்தினிடையே மாணவர் "தேவன் பாப்புவை யாசீர்வதிப்பாராக!" என்னும் பாடலைப் பாட, விடை பெற்றேகினர். பள்ளிப் பிள்ளைகளுக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டுக் கூட்டங் கலைந்தது. வந்தனோபசாரப் பத்திரம் ஆங்கிலத்திலும் தமிழிலும் சுவாமிமார்கள் வாசிக்க, தெலுங்கில் மட்டும் வேறொருவர் வாசித்ததின் காரணம் என்ன, தெலுங்கு தெரிந்த சுவாமியார்களில்லையா வென ஜனங்கள் பேசிக் கொண்டது எனது காதில் விழுந்தது. என்று நமது நிழிபர் எழுதுகிறார்.

மறு நாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் பெரிய கோவிலில் ஆண்டவரவர்கள் பாடல் பூசை செய்தார்கள். விசுவாசிகள் திரளாய்ச் சென்று திவ்ய நன்மை வாங்கினர். அன்று மாலை அவர் திருச்சபையின் மகத்துவத்தைப் பற்றி அக்கோவிலில் பிரசங்கஞ் செய்து, அர்ச். பர்ப்பானவரின் பரிபூரண ஆசீர்வாதப் பலனை யளித்தார். பின்னர் திவ்யநற்கருணை யாசீர்வாதம் நிறைவேறிற்று.

திங்கட்கிழமை யன்று ஆங்கிலோ இந்திய பிள்ளைகளில் ஞானோபதேசப் பரீட்சையில் முதன்மையாக வந்த பிள்ளைகளுக்குப் பொற் சிலுவைப் பரிசு ஆண்டவரவர்களால் அளிக்கப்பட்டது. மறு தினங்களில் அர்ச். காபிரியேல் பாடசாலை, சென்ட் மேரிஸ் பாடசாலை முதலிய ஆதீனப் பாடசாலைகளைப் பார்வையிட்டார். புதன்கிழமை மாலை புதுப்பேட்டையில் புதிதாய்க் கட்டப்படும் அர்ச். அந்தோனியார் கோவிலைப் பார்வை யிட்டார். வெள்ளிக்கிழமை காலையில் மண்ணடி அர்ச். சவேரியார் கோவிலில் பூசை வைத்து, அன்று மாலை பெரிய ரயில் மார்க்கமாக சென்னையினின்றும் ஐதராபாத்துக்குப் புறப்பட்டுப் போனார் எனத் தெரிகிறது.

வாயக்கும். அல்லது "நான் உபாத்தியாயரை வீட்டில் வைத்திருக்கிறேன். அவர் அந்த விஷயங்களை யெல்லாங் கவனித்துக் கொள்வார்" என்று உன் கடமையை மற்றவர்கள் மேல் போட்டு விடுவாயாக்கும். இவ்வாறு செய்வது யுக்தமல்ல. இவர்களில் சுவாமிமாரை நான் சேர்க்கவில்லை யென்பது குறிப்பிடத் தக்கது. சுவாமிமார்கள் மேற்பார்வையில் இந்த வேலை சரிவர நடக்கும் என்பது திண்ணம். ஆனால் பிள்ளைகள் தாய் தந்தையரிடம் இந்த விஷயங்களைக் கற்றுக் கொள்வதுபோல சாதாரண உபாத்திமாரிடங் கற்றுக் கொள்ள முடியாது. ஆகவே பெற்றோருக்கு எத்தகைய வேலை யிருந்தபோதிலும், பிள்ளைகளுக்கு ஞானோபதேசஞ் செய்வதை அசட்டை செய்தலாகாது. நாளடைவில் பிள்ளைகளுக்குப் படிப்படியாய் ஞானோபதேசத்தைக் கதா ரூபமாய்க் கற்பித்து வந்தால், நல்ல பலன் கிடைக்கும் என்பதைப் பெற்றோர் அறிவார்களாக.

(இன்னும் வரும்.)

நன்மை காடி.

கைத்தொழில்.

நெருப்புக் குச்சி.

நெருப்புக் குச்சி மிக ஸாதாரணமான வஸ்துவாய் இருத்தல் பற்றி அது எங்கிருந்து வருவதென்றும், அதை எவ்வாறு செய்கிறார்கள் என்றும், அதன் பொருட்டு அந்நிய நாடுகளுக்கு எவ்வளவு பொருள் கொடுத்து வரவேண்டியிருக்கிறதென்பதையும் நாம் கவனிப்பதில்லை. அந்நிய நாட்டு நெருப்புக் குச்சிகளை நாம் விசேஷமாய் உபயோகித்து வருவதினால் நமது சென்னை இராஜதானியிலிருந்து மட்டும் வருஷா வருஷம் 15 லக்ஷம் ரூபாய்க்குக் குறையாமல் செலவாகின்றது. இந்தியா முழுவதிலும் இதே போன்று எவ்வளவு செலவாகு மென்பதை நீங்கள் ஊகித்துக்கொள்ளலாம்.

இந்தியாவில் ஜனத்தை 300,000,000, என்று சுமாராய் எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு நாளைக்கும் தலைக்கு ஒருகுச்சி வீதம் செலவானபோதிலும் 300,000000 நெருப்புக் குச்சிகள் செலவாகும். ஒவ்வொரு பெட்டியிலும் 100 குச்சி யிருப்பினும் தினம் 3,000,000 பெட்டிகளாகின்றன. 12 பெட்டி கொண்டது 1 டஜன்; அவ்வாறு 12 டஜன் கொண்டது 1 குரோஸ் பெரிய குரோஸ், பெட்டியில் 144 சிறு பெட்டிகள் இருக்கின்றன. ஒரு பெட்டி ஒரு பைசாவுக்கும் விற்பதானாலும் கூட ஒரு குரோஸ்பெட்டிக்கு (144 பைசா) 12 அணா கொடுக்கிறோம். அதாவது தினம் ஒன்றுக்கு 15,000 ரூபாயாவது செலவாகிறது. வருஷத்தில் 50 லக்ஷம் ரூபாய்க்குக் குறைவில்லை. உண்மையாகவே சென்ற மூன்று வருஷங்களில் சென்னை இராஜதானியின் வியாபாரம் மட்டும் பின்னே காட்டப்பட்டிருக்கிறது. 1920-21 வருஷத்தில் 15,99,000 ரூபாய் விலையுள்ள நெருப்புப் பெட்டிகள் அந்நிய நாடுகளிலிருந்து சென்னையில் இறக்குமதியாயின. 1921-22 வருஷத்தில் 15, 76,000 ரூபாய்; 1922-23 வருஷத்தில் 14, 61,000 ரூபாய்.

இந்த அபாரமான இறக்குமதித் தொகையைக் கவனிக்கும்போது, இந்தியாவிலேயே இக் கைத்தொழிலை மேற்கொண்டு இவ்வளவு வியாபாரத்தையும் இந்தியரே கைப்பற்றக் கூடாதா என்று பலர் எண்ணக்கூடும். இந்தியாவின் க்ஷேமத்தை நாடக்கூடிய ஒவ்வொரு தேசபக்தனும் அவ்விதமேதான் எண்ணுகிறான். இந்தியாவிலும் இக் கைத்தொழிலை மேற்கொள்ள இயற்கைச் சாதனங்களும் கூடியவரையில் திருப்திகரமாகவே இருக்கின்றன. இந்திய வனங்களில் விளையும் மரங்கள் நார்வே, ஸ்வீடன், ஜப்பான் முதலிய தேசங்களில் விளையும் மரங்களைப் போல் மிகச் சிறந்தவைகளாகஇல்லாவிட்டாலும், சாதாரணமான நெருப்புப் பெட்டிகள் செய்ய மிகவும் ஏற்றவைகளே.

ஆயினும் இந்தியாவில் இக் கைத்தொழில் பலப்படாமலிருப்பதற்குக் காரணம் அநேகம். அவற்றுள் இயற்கைப் பொருள் கிடையாதிருப்பது ஒரு பலத்த காரணமன்று. பிரதி தினமும் இந்திய தொழில் சாலைகளில் அந்நிய நாட்டார் செய்வது போல் அதிகப் பெட்டிகளைச் செய்யமுடியாமலிருக்கின்றது. நார்வே, ஸ்வீடன் முதலிய நாடுகளில் தொழில்சாலையில் ஒவ்வொரு நிலைமையிலும் சீரான யந்திரங்களையே உபயோகப் படுத்துகின்றன. மரம் பிளப்பது, குச்சு வெட்டுவது, மருந்து தவைப்பது, பெட்டி செய்வது, குச்சிகளைப் பெட்டியில் நிரப்புவது, முதலான ஒவ்வொரு நிலையிலும் யந்திரங்களே வெகு வேகமாக வேலை செய்து ஆயிரக்கணக்கான பெட்டிகளைத் தினந்தோறும் செய்து விடுகின்றன. இந்தியாவிலோ அவ்வளவு சிறந்த யந்திரங்களைத் தொழில் சாலைகளில் உபயோகப் படுத்துவதில்லை. பல வேலைகளைக் கைகளாலேயே செய்கிறார்கள். ஆகையால் அந்நிய நாட்டார் கட்டுக் கட்டாய்த் தங்கள் நெருப்புப் பெட்டிகளை இந்தியாவில் கொண்டுவந்து நிரப்பி விடுகிறார்கள். அவர்கள் ஒரு குரோஸ் பெட்டிக்கு (1-8-0) ஒரு ரூபாய் எட்

டணு இறக்குமதி வரி கொடுத்துங்கூட மிக மலிவாய்த் தங்கள் நெருப்புப் பெட்டிகளை விற்கின்றனர்.

நமது நாட்டிலும் சிறப்பான யந்திரங்களை உபயோகித்து நாமும் அந்நியரைப்போலவே வேலை செய்யக் கூடாதோ வென்றால், நமது நாட்டுத் தொழிலாளிகளுக்கு விசேஷமான கைமுதல் இல்லை. ஆரம்பத்தில் கைமுதல் போடாவிட்டால் தொழிற் சாலைகளில் எவ்வாறு சிறந்த யந்திரங்களை வாங்கமுடியும்? ஐரோப்பிய வர்த்தகர்களோ லக்ஷப் பிரபுக்கள்; நமது தொழிற் சங்கங்கள் எளியவை. நமது தேசத்தில் தொழில் பலப்பட வேண்டுமானால் நமது நாட்டாரே மிக அதிகமாய்த் தங்கள் செல்வத்தை இத் தொழிலில் செலவிட வேண்டும். அப்பொழுது முதல் போட்டவர்களுக்கும், தேசத்துக்கும் லாபமுண்டாகும். புதிய தொழில்களில் பணத்தைச் செலவு செய்து லாபம் சம்பாதிக்கும் வழக்கம் நமது தேசத்தாருக்கு நூதனமாயிருப்பதால் முதலாளிகள் இத்தொழிலில் அதிகமாக முதலைப் போட்டு வேலைசெய்ய முன் வருவதில்லை. இதுவே நமது நாட்டுக் கைத்தொழில்களுக்கெல்லாம் பொதுவாயுள்ள பலமான தடை. கைமுதல் விசேஷமாயில்லாமல் தொழில்கள் பலப்பட வழியில்லை யென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே.

அந்நிய நாட்டாரோ கவர்ன்மெண்டார் இறக்குமதியின் பேரில் வரியை அதிகப் படுத்தின போதிலும் அதைச் சற்றுமே கவனியாது, தமது முதலை 4, 5, மடங்குகூட அதிகப்படுத்திக் கொண்டு முன்னிலும் பதின்மடங்கு அதிகமாய் முயற்சி எடுத்துக்கொண்டு தமது தொழில் சாலைகளில் மும்முரமாய் வேலைசெய்கிறார்கள். இதுவுமன்றி இந்தியாவிலும் முக்கிய பட்டணங்களில் தங்கள் தொழில்சாலைகளை ஸ்தாபித்து, நமது நாட்டிலேயே நெருப்புக் குச்சி செய்யவும் பிரயத்தனம் செய்வதாகப் பத்திரிகைகளின் மூலமாய் அறிகிறோம். அந்நிய தேசத்தார் நமது நாட்டில் தொழில்சாலை ஏற்படுத்துவார்களானால் அவை நமது தேசத்து ஜனங்கள் செய்யும் தொழிலாகுமா? நெருப்புக் குச்சியின் விலை சற்று மலிவாகலாம். ஏதோ சில இந்தியர்கள் அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்து கூலி பெறலாம். அவர்களின் யந்திரங்களை வேலை செய்யவும், மேல் தனிக்கைப் பார்க்கவும் ஐரோப்பிய என்ஜினீர்களும் வேலைக்காரர்களும் இருப்பார்களேயன்றி இந்தியர்கள் இருக்கமுடியாது. சில்லரை வேலைகளுக்குமட்டுமே இந்தியர் கூலியாளரை உபயோகப்படுத்தக்கூடும். இதுவேயன்றி வேறு இலாபத்தை இந்தியர்கள் அடைய இடமில்லை. கைமுதலெல்லாம் அந்நிய நாட்டாருடைய தாகையால் கைத்தொழில் செய்வதால் உண்டாகும் லாபமெல்லாம் முதல் போட்டவர்களுக்குச் செல்லுமே யல்லாது இந்தியருக்கு என்ன கிடைக்கும்? இந்தக் கைத் தொழிலைப்பற்றி தற்காலத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கும் இந்தியத் தொழில் சங்கங்கள் அப்பொழுது தலையெடுக்க முடியாமல் படுத்துவிடும்.

வேறு தேசத்தார் இந்தியாவில் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதால் இந்தியாவுக்கு விசேஷ லாபமில்லை யென்பதை அறிந்து கவர்ன்மெண்டார் அந்நியரை இந்தியாவில் தொழிற்சாலை ஏற்படுத்த வொட்டாமல் தடுப்பதே நலம். இல்லையேல் அந்நிய நாட்டார் தமது முதலை பாதியோ, கால்பாகமோ போட்டு, மீதியுள்ள பாதியை, அல்லது முக்கால் பாகத்தை இந்தியாவில் வசூல் செய்து தொழில் நடத்தினால் இந்தியருக்கும் பாதி லாபம் வருவதுடன் தொழிலின் அனுபவமும் நமக்குக் கிடைக்க வழியுண்டு. இந்தியரின் கைமுதல் விசேஷமாய் இல்லாத தொழிற்சாலைகளை இந்தியாவில் ஸ்தாபிப்பது சரியன்று. அது இந்தியாவின் க்ஷேமத்தை விருத்தி செய்யக் கூடிய வழியுமன்று.

இந்தியரின் கைமுதல் விசேஷமாய் ஏற்பட்டுள்ள தொழில் சங்கங்கள் வேலைசெய்வதை கவர்ன்மெண்டார் காப்பாற்றவேண்டும். சங்கங்களுக்குப் பொருளுதவி வேண்டிய சமயத்தில் கவர்ன்மெண்டார் தம்மால் இயன்றவரையில் உதவிசெய்யத் தயாரா யிருக்கவும் வேண்டும். அவ்விதத் தொழில் சங்கத்தார் சர்க்கார் காடுகளில் மலிவாய் வேண்டிய மரங்களை வெட்டிக் கொள்ளவும், அவர்களுக்கு காலடைவில் உபயோகமாகக் கூடிய மரங்களை விசேஷமாய் வளர்க்கவும், சகாயம் செய்யவேண்டும். இவ்வாறு செய்துவந்தால் இந்தியாவிலும் வரவர நெருப்புக் குச்சி செய்யவும் கைத்தொழில் பலப்படும். ஸாது ஜனங்களும் இந்த விஷயத்தில் கவனிக்க வேண்டிய கடமை ஒன்றுண்டு. அவர்கள் இந்தியாவிலேயே செய்த நெருப்புக் குச்சியைத்தான் உபயோகப்படுத்த வேண்டுமென்று தீர்மானம் செய்துகொள்ளலாம். ஆனால் தற்காலத்தில் இவ்விதத் தீர்மானம் பிரயோசனப்படமாட்டாது. ஏனெனில், எத்தனையோ ஊர்களில் கடைத்தெருவெல்லாம் தேடித் தேடிச் சென்றாலும் இந்தியாவில் செய்த நெருப்புப் பெட்டிகள் கிடைப்பது அரிது. ஆகையால் அவ்வூரில் உள்ளவர்கள் எல்லாரும் அந்நிய நாட்டு நெருப்புப் பெட்டிகளையே உபயோகிக்கவேண்டியிருக்கின்றது.

ஆனால் அவர்கள் வேறு தேசத்தில் செய்த நெருபபுப் பெட்டிகளை மிக அதிகமாய் வாங்காமல் இப்பொழுது செலவு செய்யும் தொகையில் பாதி அல்லது கால்பாகம்கூட சிக்கனமாய்ச் செலவு செய்ய முயற்சி செய்யலாம். இது எல்லாருக்கும் சாத்தியமான வேலை. "பலதுளி பெருவெள்ளம்" என்றபடி எல்லாரும் ஒருங்கே முயற்சி செய்தால் அந்நிய நாட்டு இறக்குமதி விலையில் குறையுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. சுருட்டு, பீடி பிடிப்பவர்கள் இதை விசேஷமாய்க் கவனிக்கவேண்டும். இவர்கள் அந்நியநாட்டு நெருப்புக் குச்சிகளை உபயோகித்துவருதைக் கூடியமட்டும் நிறுத்தவேண்டுமென்று பிரயத்தனம் செய்வாராகில், பீடி, சுருட்டு இவை பிடிப்பதும் குறைந்து, அவ்வழியாகவும் தேசத்துக்கு க்ஷேமமுண்டாகும். வீட்டு வேலையைக் கவனிக்கும் பெண்டிர்களும் இவ்விஷயத்தை யெல்லாம் சற்று அறிந்து அவர்களும் மிகச்சிக்கனமாய் நெருப்புக் குச்சியை உபயோகித்து அந்நியநாட்டிலிருந்துவரும் இறக்குமதியைக் குறைக்கக்கூடும். இயற்கைப் பொருள்களை அடைய அநுகூலங்களிருந்தும், நமது நாட்டில் இக்கைதொழில் இன்னும் பலப்படாமல் இருப்பது விசனிக்கத்தக்கதே. (இ. நே)

வங்காளத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஓர் விநோத மரம்.

அசன் சால் சுரங்கத்தில் பூமியினின்று தோண்டி வெட்டி எடுக்கப்பட்ட ஓர் மரம் பத்து லட்சம் வருடங்களாக இருந்ததாக விஞ்ஞாக சாஸ்திரம் அறிந்தவர்களால் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நூதன மரம் கண்டு பிடிக்கப்பட்ட முறை விநோதமானது. அஸன்சாலில் ரயில்வே வேலை செய்யும் கூலிகளில் ஒருவன் மண்வெட்டியினால் ஒரு இடத்தை வெட்டும் பொழுது அவன் ஆயுதம் மேலே தள்ளப்பட்டது. அதனால் இஞ்சினிரிடம் என்ன செய்வதென்று கேட்டு மறுபடியும் வெட்டிக்கொண்டிருக்கும்பொழுது ஒரு பாறை காணப்பட்டது. இஞ்சினியருக்கும் கொஞ்சம் பூகற்ப சாஸ்திரம் தெரிந்ததினால் கல்கத்தா கண்காக்ஷி சாலையிலுள்ள பூகற்ப சாஸ்திர இலாகாவுக்கு தான் புதியதாய்க் கண்டு பிடித்ததைத் தெரிவித்தார். அந்த இலாகாவிலுள்ள மேஜர் பிராட்ஷா அவ்விடத்திற்கு வந்து பார்வையிட்டுப் வேலைசெய்து மரத்தைக் கண்டுபிடிந்தார்.

கைப்பூமரம்.

தென் அமெரிக்கா மெக்சிகோ நாட்டில் ஒரு விநோத மரமிருக்கிறது. அதனை அந்நாட்டு ஜனங்கள் கைப்புமரம் என்று சொல்லுகிறார்கள். அந்த மரத்தின் ஒவ்வொரு பூவிலுமிருந்து மனிதர் கையைப்போல ஓர் உருப்பு நீண்டிருக்கிறதாம். அதன் நுனியில் நகமுள்ள கைவிரல்களை போல வளைந்திருக்கிறதாம். ஒவ்வொரு மரத்திலும் இத்தகைய புஷ்பங்கள் ஆயிரக்கணகாயிருக்கின்றனவாம். தூரத்துப் பார்வைக்கு இவை மனிதர் கைகளைப் போல இருந்ததால் அந்நாட்டு ஜனங்கள் அதனைக் கீழே விழுந்து வணங்கி வந்தார்கள். அந்தப் பூவை ஒருவரும் பறிப்பதில்லை.

தூத்துக்குடி மிகவும் வந்திக்கத்தக்க பிரான்சீஸ்கு திபூர்சி யுவ்ஸ் ரோச்சு மேற்றிராணி யாண்டவரவர்கள் திவ்ய சமுகத்துக்கு.

ஆண்டவ!

தேவரீரவர்கள் நமது தாயாகிய திருச்சபையின் ஞான அதிகாரம் பெற்ற காலத்தில் இதுவே முதல் தடவையாக எங்கள் மத்தியில் இங்கெழுந்தருளி இருப்பது எங்கள் ஜீவிய காலத்தின் ஓர் விசேஷ தினமென்பதை மறவாத சம்பவமாக அக்களித்து எங்கள் ஒவ்வொருவர் மனதிலும் அழியா அச்சரம்போல் பதிந்திருக்கிறது.

"ஓ இந்தியாவே! உனது மக்களே உனக்கு இரக்ஷண்யத்தைக் கொண்டுவருவார்கள்" என்பது 13-ம் சிங்கராய பாப்பரசரின் திரு வாய்மொழி. அம்மொழிப்படி நிறைவேறி, பரதகுலத்தின் விசேஷ பாதுகாவலரான அர்ச். பிரான்சீஸ்கு சவேரியாரின் விடா முயற்சியாலும், அஞ்சா மனத் துணிவினாலும் நம்மை நன்னெறி பெறச் செய்து அவருடைய விசேஷ வேண்டுதலால் நம் குலத்திலேயே ஓர் உத்தமரும், சற்குண குருவுமான அம்முனிவரின் நாமதேயம் கொண்ட தேவரீர் அவர்களைத் தேவன் இவ்வுன்னத பதவிக்குத் தெரிந்தெடுத்து, பரதகுலத்தை மகிமைப்படுத்த கிருபைபாலித்த எம்பெருமானுக்கும், சுதேச மேற்றிராசனமட்டில் அடங்காத ஆவல் கொண்டு தூத்துக்குடி மேற்றிராசனமென்ற புதிய சுதேச மேற்றிராசனத்தை ந[illegible] சுத்த பிதா 11-ம் பத்திநா[illegible] தியில் ஸ்தாபிக்கக் கி[illegible] குலத்தார் சகலரும், இங்கு[illegible] கள் அனைவோரும் மறவாத[illegible] கடமைப்பட்டிருக்கிறோம்.

கடந்த சில வாண்டுகளுக்குமுன் எம்மாத்தும ரக்ஷணிய அலுவல்களுக்காய் அனுப்பப்பட்டு நாங்கள் மெய்யான கிறிஸ்தவர்கள் என்றமேரையாய் நடந்து மோக்ஷபேரின்ப பாக்கியத்தை அடையும்படியாய் அயரா துழைத்து எங்கள் விசுவாசத்தை நிலைநாட்ட செப அப்போஸ்தல சபையொன்றை ஸ்தாபித்த காலம்சென்ற சங்கைக்குரிய கனம் சூசைமாணிக்கம் சுவாமி அவர்களுக்கு எங்கள் முழுமன நன்றி செலுத்துகிறோம். அப்பால், எங்கள் பங்கு விசாரணைக் குருவாய் நியமிக்கப்பட்ட கனம். வீ. தர்மநாத சுவாமி அவர்கள் எங்கள் ஆத்தும ஈடேற்றத்திற்காகவும், ஊர் சீர்திருத்தங்களுக்காகவும், கல்வி அபிவிருத்திக்காகவும், தேவ தோத்திர மகிமைக்காகவும், தன்னலப் பரித்தியாகம் பண்ணி ஓர் பெரிய மணல்மேட்டை பனிபோல் கரைத்து, கடற்கற்களால் ஓர் சிறந்த ஊர் துகோபியைக் கட்டி, தேவதாய்க்குச் சகலரும் தலைமுறை தலைமுறையாய் கைகூப்பி, சிரம் வணங்கி மகிமை பெறச்செய்த ஓர் பெரிய ஞாயக சின்னம், ஏற்படக் காரணராயிருந்ததற்காக பெரியதாழை அந்நல்ல தந்தையை மறவாது நன்றி செலுத்துகிறது. அந்நல்ல குருவுக்கு நாங்கள் எவ்வித கைமாறளித்தாலும் ஈடாகாது; "நன்றி மறப்பது நன்றன்று."

சங்கைக்குரிய சூசைமரியநாத சுவாமி அவர்கள் காலத்திலும் நாங்கள் பத்தியில் அதிகரிக்கும்படியாய் மோக்ஷராக்கினிமாதா சபையொன்றை ஸ்தாபித்து நாங்கள் ஞான காரியங்களில் சுமுத்திரையாய் நடக்கும்படியாய் பிரயாசித்த அந்நல்ல தந்தை அவர்களுக்கும், அவர்களுக்குப் பின் எம் சபையின் கற்பனைகளை முறையே அநுசரிக்கும்படியாய் கண்காணித்து வந்த கனம் லூயிஸ் ஞானம் சுவாமி அவர்களுக்கும் நாங்கள் நன்றி செலுத்துகிறோம்.

அன்புக்குரிய ஆண்டவரவர்களே! தேவரீர் எங்கள் மட்டில் கொண்ட அன்பினால் நம் குலத்திலேயே ஓர் சிறந்த குரு, கனம் மத்தேயு பெர்னாந்து சுவாமி அவர்களை எங்கள் பங்கு விசாரணைக் கனுப்பி எங்கள் சீர்கேடுகளை நேர்படுத்தி

கடிதங்கள்.

[நிருபநேயர்கள் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர். கடிதம் எழுதுவோர் தங்கள் கடிதங்களை மிகத் திருத்தமாயும், சுருக்கமாயும் காகிதத்தின் ஒரே பாகத்தில் இடது பாரிசத்தில் நாலு விரற்கடை இடம் விட்டும் எழுதுவதுடன், தங்கள் பெயர் விலாசங்களையும் தெளிவாய் எழுதவேண்டும். பிரசுரஞ்செய்ய விரும்புவோர் தமிழிலேயே எழுதி அனுப்பவேண்டும். ஆங்கிலத்தில் எழுதினல் தாமதித்தே பிரசுரிக்கப்படும்.]

சேர்ந்த மரம்.

ஐயா,

இவ்வூர் கத்தோலிக் வாலிப ஆண்பிள்ளைகளுக்குள் ஒற்றுமை, பத்திரிகாபிவிர்த்தி, பொதுநலப் பிரியம் முதலிய சீர்திருத்தம் ஏற்படுத்தும் நோக்கங்கொண்டு கத்தோலிக் வாலிபர் சங்கமெனும் மகுடம் பூண்ட சங்கமொன்று இவ்வூரில் நிகழும் ஜனவரி௴ 16௳ ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஸ்தாபக தினமன்று கூடிய கூட்டத்தில் இவ்வூர் பங்கு கனம் A. குத்தாரியர் சாமிகள் S J. அக்கிராசனம் வகித்தார்கள். அவ்வமயம் இவ்வூர் பங்கு கனம் J. மாசில்லாமணி சாமிகள் S. J. தாலுகா ஜில்லா போர்ட் மெம்பர் ஸ்ரீமான் கே. வி. பிரான்ஸிஸ் சேவியர் மூப்பனரவர்கள், ஜெனரல் மெர்ச்சண்ட் கமிஷன் ஏஜண்ட் கோவில் மானே[illegible]ன் தி. மி. அந்தோனி முத்து மூப்[illegible]மானேஜர் ஸ்ரீமான் தே. [illegible]ன், இன்னும் இவ்வூர் பிர[illegible]கரும் கூட்டத்திற்கு விஜயம் [illegible]ள். ஸ்ரீமான் கே. வி. பிரான்ஸிஸ் சேவியரவர்களும், தலைமையாசிரியர் ஸ்ரீமான் சத்திய நாத தேவரவர்களும், பாளையங்கோட்டை ஐரோப்பிய கன்னியர் மடம் உபாத்தியாயர் ஸ்ரீமான் மரியசூசை மூப்பனரவர்களும் அரிய உபந்நியாசம் செய்தார்கள். சங்கத்திற்கு, இவ்வூர் மிராசுதாரும், தாலுகா போர்டு மெம்பரும் இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட முக்கிய காரணஸ்தருமான ஸ்ரீமான் சக்கரைய்யா மூப்பனரவர்கள், பிரஸிடெண்டாகவும், தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் சத்தியநாதத் தேவரவர்கள் வைஸ் பிரஸிடெண்டாகவும், போர்ட் ஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் சவரிமுத்து மூப்பனரவர்கள் கௌரவ காரியதரிசியாகவும், பண்ணையார், ஸ்ரீமான் F. X செல்லையா மூப்பனரவர்கள் உதவிக் காரியதரிசியாகவும், ஜெனரல் மெர்ச்சன்ட் ஸ்ரீமான் தி. மி. அருளப்ப மூப்பனரவர்கள், பொக்கிஷதாரராகவும், போஸ்ட் மாஸ்டர், ஸ்ரீமான் கே, அந்தோனி மூப்பனரவர்கள், உபதேசியார் ஸ்ரீமான் சவரிநாயகம் பிள்ளையவர்கள், ஜெனரல் மெர்ச்சன்ட் ஸ்ரீமான் ஞா. வி. பாகூசை அந்தோனி மூப்பனரவர்கள், மெஸர்ஸ், ச. வி, பொ. கம்பேனி ஹெட் அக்கவுண்டண்ட் ஸ்ரீமான் M. சூசை மூப்பனரவர்கள, மெஸர்ஸ், தி. மி. அ. மளிகை ஹெட் அக்கவுண்டன்ட் ஸ்ரீமான் அ. ரு. அந்தோனி மூப்பனரவர்கள், ஆகிய இவர்கள் காரிய நிருவாக சபை யாராகவும், நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சங்கக் கட்டிடத்தின் வாசகசாலையில் மெம்பர்களுக்கும் இன்னும் இவ்வூரார்களுக்கும் பிரயோஜனமாகும்படி, இலௌகீக, வைதீக, விஷயங்களுக்கடுத்த அநேக புஸ்தகங்கள், நாவல்களும், இன்னும் டெய்லி எக்ஸ்பிரஸ், திராவிடன், சுதேசமித்திரன், காத்தலிக் லீடர், ஸ்டாண்டார்டு, சர்வ வியாபி, சத்திய வேத பாதுகாவலன், பொதுநலம், கிராம வாழ்க்கை, இந்தியன் ரேவியூ, மதராஸ் ஆயுர்வேதிக் ஜர்னல், கத்தோலிக் சத்தியாபிமான சபை பத்திரிகைகள், இருதயதூதன், நல்லாயன் முதலிய பத்திரிகைகளும வாசிக்க வைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்தாபகக் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தவர்களில், அநேக பொதுநல அபிமான கனவான்களால் நன்கொடையாக ரூபாய்களும், புஸ்தகங்களும் அளிக்கப்பட்டன.

இச்சங்கம் ஏற்படுவதற்கு முக்கிய காரணஸ்தராயிருந்த லான்ட் லார்டு தாலுகா போர்ட் மெம்பர் மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான் சக்கரைய்யா மூப்பனரவர்களுக்கு இச்சங்கம் என்றும் நன்றி காட்டக் டமைப்பட்டிருக்கிறது. எல்லாம் வல்ல இறைவனின், திருவருளால் இச்சங்கத்தால் இவ்வூர் நலம் பல பெறுவதாக.

28—1—1925. சேர்ந்தமரம். } A. சவரி முத்து, கௌரவ காரியதரிசி, க. வா. சங்கம்.

நாங்கள் சகலத்திலும் மேன்பாடடைந்து புண்ணியத்தில் ஓங்கிவளர ஆவல் கொண்டனுப்பிய தேவரீரவர்களின் நல்லன்புக்கு நாங்கள் எவ்விதமாய் நன்றி செலுத்தக்கூடும்?

தேடுங்கள், கண்டடைவீர்களென்றதற்கொப்ப கடந்த மூன்று வருஷங்களாய் ஆவலாய் தேடி எதிர்பார்த்திருந்த தேவரீரவர்களின் திருமுக தரிசனையை இச்சொற்ப நாளுக்குள் நாங்கள் கண்டு களிகூற பாக்கியம் பெற்றது எங்கள் பங்கு கனம் மத்தேயு பெர்ஞர்து சுவாமி அவர்களின் தளராத ஊக்கமும், இச்சொற்ப நாளுக்குள் எங்கள் மட்டில்கொண்ட நல்லன்பென்றே எண்ணி அந்நல்ல குருவுக்கு நன்றி செலுத்தி, பல்லாண்டுகளாய் எங்கள் மத்தியில் உற்சாகத்தோடு உழைக்க தேவனை பிரார்த்திக்கிறோம்.

இறுதியாய் எங்கள் ஆண்டவரவர்களே!

நாங்கள் இங்கு சமர்ப்பித்திருக்கும் இச்சொற்ப காணிக்கையைத் தயவாய் ஏற்று எங்கள் ஊரையும், குடும்பங்களையும், எங்கள் சபைகளையும் தேவரீரவர்களின் திருக்கரத்தால் ஆசீர்வதிக்க மிகுந்த தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆண்டவரவர்கள் பல்லாண்டு
வாழி! வாழி!! வாழி!!!.

இங்ஙனம்,
சேசுகிறிஸ்துநாதரில் பிரியமுள்ள,
சேப அப்போஸ்தல சபையார்,
மோக்ஷராக்கினிமாதா
(அமலோற்பவ சபையார்.)
குழந்தை திரேஸ் பாடசாலை
சிறுமிகள்.

பெரியதாழை,
2—2—25.

"கத்தோலிக் இந்திய சங்கம்"

குறித்த காலத்தில் ஜுபிலிக் கூட்டம் நடவாததற்குக் சுகாரணம்.

ஐயா,

முன் வந்த இரண்டொரு பத்திரிகைகளில் ...... "க. இ. சங்கம்" இன்னும் குறித்தபடி ஜுபிலிக் கூட்டத்தை நடத்தாத காரணமேனோ வெனத் தாங்கள் ஒரு வியாசம் வரைந்துவிடுத்தீர்கள். ஆனல் ஷை கூட்டம் குறித்த காலத்தில் நடவாததற்குப் பல காரணங்களிருப்பதாய் நமது சங்கத்தின் காரியதரிசியவர்கள் எனக்கு எழுதியுள்ள கடித மூலியமா யறியலானேனாதலால், இம்முக்கிய விஷயத்தை ஏனைய நேயர்களும் அறியும் வண்ணமாக சில முக்கிய காரணங்களை மாத்திரம் சுருக்கமா யெடுத்து விடுத்தனன். அதாவது.

1. நடத்தவிருக்கும் ஜுபிலிக் கூட்டத்திற்கு அத்துக்குடி மேற்றிராணியாராகிய மகா வந்திக்கத்தக்க ரோச் ஆண்டவரவர்களை வரவழைப்பதாய் எக்ஸிக்யூட்டிவ் கமிட்டியில் தீர்மானம் பண்ணப்பட்டிருக்கிறது. இத்தீர்மானத்தின்படி நமது முதல் ஆண்டவரவர்களை வரவழைக்கச் செய்யவேண்டிய பல செலவுகளில் தலைமையானதாகிய பிரயாணச் செலவு மாத்திரம், அதிலும் ரெயில் சார்ஜ் மாத்திரம் முதல் கிளாஸுக்கு போகவர ரூ. 128 ஆகும். ஜுபிலிக்கென்று வசூலாகியிருக்கும் தொகையோ! மொத்தம் 110 ரூ. தானும்.

2. சங்கம் கத்தோலிக்கரனைவர்க்கும் பொதுச் சங்கமாயிருப்பதால் எக்ஸிக்யூட்டிவ் கமிட்டியில் தீர்மானமாகும் விஷயங்கள் பொதுவாக எல்லோரும் அறிந்து நாலு பேர்களுடைய யோசனைகளுக்கும் இணங்கியதாக வேண்டுவதோடு, வெளியிடங்களிலுள்ளவர்களது விருப்பங்களையும் திருத்தங்களையும் பெறவேண்டுமாதலால் சிறிது கால சாவகாச மவசியம்.

3. ஒழுங்கு சீர்திருத்தப்பட வேண்டுமென்று கமிட்டி செய்த ஏற்பாடு அமுலுக்கு வருமக் கூட்டத்திற்கு ஏறக்குறைய எல்லோருமே வந்திருந்து, அமுலுக்குக் கொண்டுவருவது நலம். ஆதலால் அதற்கு, கமிட்டியின் தீர்மானங்களை அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும்.

4. சங்கம் ரெஜிஸ்தர் செய்யப்பட்ட சங்கமாயிருப்பதால், முதல் முதலில், கவர்ண்மெண்ட் ரெஜிஸ்த்ரேஷன் ஆபீசர் அங்கீகரிக்கவேண்டும்.

5. "ஒழுங்கு சீர்திருத்தக் கமிட்டி" அவ்வொழுங்குகளை இன்னும் காரியதரிசியவர்களுக்கு அநுப்பவில்லையாம்.

6. ஷை சீர்திருத்தக் கமிட்டியிலிருந்து கனம் காரியதரிசியவர்களுக்கு தீர்மானங்கள் வந்த பின்னும் அதை எக்சிக்யூட்டிவ் கமிட்டியில் வைத்து ஆலோசித்து அச்சிட்டு யாவருக்கும் அநுப்பவேண்டும். அதற்குப் பின்னரே அமுலுக்குக் கொண்டுவரத்தக்கதாயிருக்கிறது.

என்ற இப்படிப்பட்ட பல கா்ரணங்களாலேயே ஜுபிலி கொண்டாட ஆரம்பிக்காமலும் ஒழுங்கு சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொணராமலுமிருப்பதாகத் தெரிகிறது. ஆனல் ஜுபிலி கொண்டாடயோசனை செய்த கமிட்டியார் முதன் முதலில் ஜுபிலிக்குச் செல்லும் செலவைக் கணித்துக் கொண்டு, அதற்குத் தக்கவரவைத் தேடிய பின்னரே முடிவான செலவு திட்டத்துக் கொத்த நடபடிகளை நடத்தத் தீர்மானிக்க வேண்டும். இல்லாவிடில், இருப்புக்குத்தக்க செலவுக்கான விஷய சூசிகை யேற்படுத்தியிருக்கவேண்டும். இவ்வாறின்றி, இருப்புக்கும் வரவுக்கும், அதிகமான செலவுக்குரிய ஏற்பாடுகளை நடத்தும்படி தீர்மானித்துவிட்டால் காரியதரிசி மாத்திரமல்ல யார்தான் என்ன செய்யமுடியும்? இப்படியே இஜ்ஜுபிலிக் கொண்டாட்டத்திற்கு மகா வந். ரோச் ஆண்டவரவர்களை ரூ. 64 செலவு செய்து அழைத்துவிட்டு மீதி 46 ரூபாயைக் கொண்டு வேறெந் தெந்தச் செலவுகளைச் செய்வது? அழைத்துவரப்பட்ட தலைவரை அநுப்புவ தெங்ஙனம்? கூடுமானதென எண்ண முடியுமா? இவ்வொரு காரணமே மகா முக்கியமும், முதன்மையுமான தாயிருப்பதால், கத்தோலிக் சகல கனதனவான்களும், சங். குருப்பிரசாதிகளும் வேண்டிய ஆதரவுகளையும், ஆசீரையு மளித்து, இக்குறைகள் நீங்கிச் செல்வாக்கையுடையதாய்த் தாராள செலவுடன் கூடிய இனிய ஜுபிலிக் கொண்டாட்டமாய் முடிவு பெற முயற்சிப்பார்களாக.

கனம் காரியதரிசியவர்கள் பற்பல விடங்களுக்கும் சென்று கிளைச் சங்கங்களின் சம்பந்தமாய்ப் பல முயற்சிகளை யெடுத் தாட்டி வருகிறாரென்பதை யறிய ஆனந்திக்கிறோம். இது போலவே 9-2-25 மதுரைக்குச் சென்று சங். கோமஸ், அமலோற்பவ நாதர் சுவாமியவர்களைக் கலந்து பேச விருப்பதாய்த் தெரிவித்திருக்கிறார். இன்னவரின் முயற்சிக்குப் பலனையளிக்கத் தக்கதாய், ஓர் கிளைச் சங்கத்தை ஸ்தாபித்து எமது வெகு கால ஆவலைப் பூர்த்தி செய்வார்களாக. சர்வாதிகாரண கர்த்தர் சகலத்துக்கும் அருள்புரிவாராக.

S. Vedamuthu.

(குறிப்பு:—நமது குறிப்பில் கண்ட விஷயத்துக்குப்பதில் அனுப்பிய ஸ்ரீமான் வேதமுத்துக்கு வந்தனம். ஆனல் நமக்கருகாமையிலிருக்கும் காரியதரிசி நமக்கெழுது வதற்குப் பதிலாய் தூரத்திலிருக்கும் ஸ்ரீமான் வேதமுத்தைக் கொண்டு எழுது வித்ததுவிந்தையே. ப. ர்.)

மின்சாரத்தால் பால் கறத்தல்.

ஜெர்மனியிலே ஒரு வித யந்திரத்தைக் கொண்டு மின்சார சக்தியால் பசுக்களினின்று பாலைக் கறக்கும் வழி கண்டுபிடித்து, அதை யெங்கும் பரப்பி வருகின்றார்கள். அவ்வியந்திரத்தைப் பசுவினிடத்து வைத்துப் பொருத்தி விட்டால் பசு கொடுக்கக் கூடிய பால் முழுமையும் அது உறிஞ்சிழுத்துக் குறித்த பாத்திரத்தில் கொட்டி விடுகிறதாம். இந்த வகையால் மனுஷர் கறக்கிறதைவிட அதிசீக்கிரமாயும், சுத்தமாயும் பால் கறக்கப்படுவது தவிர பசுக்களும் அமைதியாகவும், யாதும் வருத்தக் குறிகளின்றியும் விட்டுக் கொடுக்கின்றனவாம். இந்த நவீன முறையால் நூற்றுக் கணக்கான பசுக்களை வைத்துத் தொழில் செய்யும் பெரிய பாற்காரர்களுக்குப் பெரிதும் சௌகரியமும் செலவுச் சுருக்கும் ஏற்படுமன்றோ?

விநோதமான குழந்தை.

மூப்பீன் ஜில்லா பாந்தனுவுக் கடுத்த மீஞ்சேயுவா யென்ற ஊரில் ஊப்பாமௌ என்ற பர்மியரது குழந்தையான மௌட்ஞ்செய் என்னும் 5 வயதுள்ள சிறுவன்பர்மாபாஷையில் உள்ள எந்த விதமான சாஸ்திரத்தையும், பல புஸ்தகங்களையும் பார்த்த க்ஷணத்திலே வாசிப்பதும், அதைப்பற்றி வியாக்கியானம் செய்வதும் இன்னும் பல இடங்களில் பிரசங்கம் புரிவதுமாக இருந்து வருகிறான். இவன் 19-1-25 யன்று சையிலா என்ற ஊருக்கு பெற்றோருடன் சென்றான். அங்கு இப்பால் மணம்மாறாச் சிறுவனை தெரிசிக்க வந்த ஜனங்கள் அளவில் ஓர் உத்தேசம் 30000 எனறு சொல்லுகிறார்கள். நானும் நேரில் பார்த்தேன். என்று ஸ்ரீமான் தீ. சொபழனியப்ப செட்டியார் எழுதுகிறார்.

பற்பல சமாச்சாரங்கள்.

சென்னை

சட்டை சபை விதிகள்:—தேர்தலுக்கு முந்திய மாகாண சட்ட சபைகள் ஒவ்வொரு தட்வை கலைக்கப்படும்போதும், பூராவாக நிறைவேறாமல் இருக்கக்கூடிய மசோதாக்களுக்கு காலாவதி தோஷம் வந்து விடுமென்று சட்டசபை விதிகள் மாற்றப்பட்டிருக்கின்றனவென்று இந்தியா கெஜட்டில் ஓர் அறிக்கை வெளியாயிருக்கிறது.

இந்தியா.

ஓட்டப் பந்தயம்:-நர்மி என்பவர் 1-1/2மைல் பந்தயத்தில் 6 நிமிஷம் 39 வினாடிகளில் 1-1/2 மைலும் ஓடிவந்திருக்கிறார். இவருக்கு முதல் வெகுமான மளிக்கப்பட்டது. பிளாண்டு என்பவன் 5000 மீட்டர்களை 12 நிமிஷங்களில் நடந்து சென்றிருக்கிறார்.

யுத்த நிறுத்த தின வசூல்:—நவம்பர் 11-ந்தேதி பாபி தினமென்பதை உத்தேசித்து செய்யப்பட்ட வசூலில் 330000 பவுன் சேர்ந்திருக்கிறது. இது ஒரு பெரும் தொகையேயாகும்.

புஷ்பக் காட்சி:—பிப்ரவரி 7, 8-ந்தேதிகளில் தேனாம்பேட்டை பொட்டானிகல் தோட்டத்தில் நடைபெறும் புஷ்பக் காட்சியில் ராவ்சாஹிப் பி. வி. சுந்தர மூர்த்தி பிள்ளை ஊறுகாய், சட்னி முதலியவற்றுள் சிறந்ததற்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசளிப்பார்.

வெளிநாடுகள்.

இங்கிலாந்தில் இன்புளுயன்ஸா:—இன்புளுயன்ஸா ஜுரம் அதிகம் பரவியிருப்பதனால் கவர்ன்மெண்டு காரியாலயங்களிலும், ஆலைகளிலும் வேலை செய்பவர்களின் தொகை மிகவும் குறைந்திருக்கிறது. இன்புளுயன்ஸா ஜுரத்தின் வேகம் மிகவும் குறைவாக விருந்தாலும் பரவி யிருக்கிறது.

பாலசுந்தரம்.

அதிகாரம் 15.

(முன் தொடர்ச்சி)

ரூபாவதி வந்த காரியம் பயன்படவில்லையே என வருந்தித் தோட்டத்தினூடு மாளிகையை நோக்கி நடக்கையில் யாரோ வருங் காலடிச் சத்தங் கேட்டுப் பக்கத்திலிருந்த பூஞ்செடியில் மறைந்து பார்த்தாள். கனகசுந்தரம் அப்போது தான் முருகனைத் தேடிக்கொண்டு போனது. அச்சமயம் அவன் தோட்டத்தில் காணப்பட்டதில் விசேஷ மொன்றுமில்லை. இராப்போசனத்துக்குப் பிறகு காலப் போக்காக உலாவ வந்திருக்க வேண்டுமென நினைத்தாள். ஆகவே அவன் உருவம் மறைந்ததும், வேகமாக மாளிகைக்குச் சென்று, தனதறைக்குள் புகுந்தாள்.

அறையின் அலங்கார விநோதங்களும், அங்கே போடப்பட்டிருந்த பஞ்சணை மெத்தையும், விலையுயர்ந்த மேசை நாற்காலிகளும், சுவரில் தொங்கிய இயற்கை விநோதப் படங்களும் அவளுடைய சுகபோக வாழ்க்கையை நினைப்பூட்டின. அவள் இருதயம் அச்சமயம் இருந்த நிலைமையில், அவளுக்கு அவற்றின்மேல் ஒரு வித ஆசங்கை யேற்பட்டது. ஆகவே அவற்றை வெறுத்தாள். மற்றவர்கள் சொத்தை யெதிர் பார்த்து சுகபோகத்தை யனுபவிக்கும் நாரியல்லவா அவள்? தன்னை நேசித்த காதலன், அக்காதலின் முன்னிட்டே தூர தேசத்தில் அநாதையாய்த் திரிந்து கொண்டிருக்க, அவள் மட்டும் செல்வ சுகபோகத்தில் ஆழ்ந்து அக்களித்திருப்பதா? அவள் பெருமை யெங்கே? சுய நலமல்லவா அவள் இவ்வாறிருப்பது? பாலசுந்தரத்தின் பரித்தியாகத்தைக் கருதாமல் சுய நலத்தைப் பாராட்டி மாளிகையில் வசித்தல் நியாயமாகுமா?

பணிப் பெண்ணை எதிர்பாராமல் ஆடை களைந்து வேறுடை யணிந்து கட்டிலிற் சயனித்துக் கொண்டாள். ஆனால் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. தன்னையே தான் வெறுத்துக் கொண்டாள். காதலனை இழந்த வருத்தம் அவள் மனதை வாதித்தது. அதே சிந்தையளாய் கட்டிலிற் புரண்டு புரண்டு படுத்தாள். திடீரென ஏதோ துணிப்பற்றி எரிவது போல் புகை நாற்றம் வீசுவதாக அவள் புத்தியிற்பட்டது. எழுந்திட்கார்ந்து உற்றுக் கேட்டாள். யாரோ திருட்டுத்தனமாய்க் கதவைத் திறக்கும் மெல்லிய ஓசை அவள் காதில் வீழ்ந்தது. உடனே ஓசை படாமல் தனதறைக் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்க்க, கனகசுந்தரமும் அவன் வேலைக்காரனும் பேசிய வார்த்தைகள் அவள் காதில் விழுந்தன. இந்தச் சம்பவத்திலும் விசேஷமொன்றுமில்லை யென்றே அவள் நினைத்தாள். ஏனெனில் கனகசுந்தரம் இரவில் வெகு நேரம் வேலை செய்பவன்; ஏதாவது பயனற்ற கடிதங்களைக் கொளுத்தியிருக்கலாம். ஆதலால் சந்தேகமொன்றுமின்றிப் படுக்கையை யடைந்தாள். பாலசுந்தரத்தின் உருவம் அவள் மனக்கண் முன் நின்றது. அவனையே நினைப்பதும் வருந்துவதுமாக அவ்விரவைப் போக்கினாள். பொழுதும் புலர்ந்தது. அவள் அப்போதிருந்த நிலைமையில் ஒன்றுஞ் செய்யாமல் சும்மாவிருந்தாளோ, பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. அவள் இன்னுங் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் காலைபோசனத்துக்குப் போக வேண்டும். பின்னர் எப்போதும் போல் ஜீவித்துவரவேண்டும். "ஆவியெனமேவியகலேமென வகன்ற" காதலன் வருவானென்று எவ்வளவு காலங்காத்திருப்பது? நம்பிக்கையேனும் உண்டா? உயிருடனிருப்பது மில்லாததும் எவ்வாறறிதற் கூடும்? என்ன வாழ்க்கை? என்ன சுகபோகம்?

"இனிப் பொறுக்கமுடியாது! இத்தகைய வாழ்க்கையில் இருப்பேனேயாகில், யான் உயிர் துறத்தல் நிச்சயம்! ஏன் என் பழைய ஜீவியமே மேல்!" என்று அப்பெண்மணி தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டாள்.

சற்றே யோசனை செய்தாள். அவள் கடைசியில் மொழிந்த வார்த்தைகள் அவள் மனதுக்கு ஆறுதலைத் தரும் போலிருந்தது. இந்த ஜீவியத்தை விட்டொழித்தாலென்ன? முன்னையப் போல் வறிய வாழ்க்கையை மேற்கொண்டாலென்ன? ஏன் பாலசுந்தரத்தைத் தேடிச் செல்வது இன்னும் நல்லது தானே? இந்த நினைவுகள் வாடியிருந்த அவள் மனதுக்குஞ் சரீரத்துக்கும் உத்சாகத்தைத் தந்தன. அவளெதிரில் தூரத்தில் தெரிந்த கருத்தடர்ந்த மேகத்தில் நம்பிக்கையென்னும் வெளிச்சங் கொஞ்சந்தெரிவது போலிருந்தது. பிரிந்து போன காதலனை மீண்டுங் காணவேண்டும் என்னும் எண்ணம் அவள் உள்ளத்தில் உறுதியாய்க் குடிகொண்டது.

உடனே அவள் படுக்கையினின்றுங் குதித்தெழுந்து நின்றாள். அவள் ஆதியில் மாளிகைக்கு வந்தபோ தணிந்திருந்த சாமான்யப் புடவை முதலியன ஒரு பெட்டியில் பத்திரமாயிருந்தன. அவற்றை யெடுத்துத் தரித்துக் கொண்டாள். அவளைப் பாதுகாத்து வந்த துரைசாமி பிள்ளைக்குக் கடிதமொன்றெழுதி மேசை மேல் வைத்தாள். அவர் தனக் களித்த விலையுயர்ந்த ஆபரணங்களைக் கழட்டி நகைப் பெட்டியில் வைத்து, அதையுங் கொண்டுபோய் மேசைமேல் வைத்தாள். பணப்பையிலிருந்த பணத்தைக் கொட்டி யெண்ணினாள்.

துரைசாமி பிள்ளை மாதமாதம் அவளுக்கு கொடுக்கும் பணத்தில் சுமார் ஐம்பது ரூபாய் வரையிலிருந்தது. அந்தப் பணத்தை யெடுத்துப் போவதா இல்லையா வென யோசித்தாள். அந்தப் பணம் மாதச் சம்பளம் போல் கொடுக்கப் பட்டதாகலில் அதை யெடுத்துப் போவதில் குற்றமொன்றுமில்லை யெனத் தன்னையே தான் சமாதானப்படுத்திக் கொண்டாள். தனக்கு மிகவும் அவசியமான சில சாமான்களை ஒரு சிறு மூட்டையாகக் கட்டிக் கொண்டு, முக்காடிட்டுக் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

சந்தடியில்லை. சித்திருட்டாயிருந்தது. ஓசை படாமல் அறையை விட்டு வெளியே [illegible]
மாடியை விட்டுக் கீழே [illegible]
கதவைத் திறந்து கொ[illegible]
கிறார்களா என்று கூடப் [illegible]
தாள். இவ்வளவு சுகபோகம [illegible]
கையை விட்டு வறுமை வருத்தம் நிறைந்த உலகத்துக்குப் போகிறோமே என்னும் நினைவு அவள் மனதிலுதித்தது. மாளிகையை நேசித்த காலம் போய், அது ஓர் பொன்மயமான காவற்கூடம் என்னும் கொள்கையுடையவளானபடியால், மன வருத்தமின்றி மாளிகையை விட்டகன்றாள்.

சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே ஒருவர் கண்ணுக்கும் படாமல், வேகமாய் நடந்து தோட்டத்தைக் கடந்தாள். கிராம வழியாய்ச் சென்றால் ஜனங்கள் கவனிப்பார்கள் எனக் குறுக்கு வழியாய்ப்போய் ரெயிலடியடைந்தாள். அங்கே அவளுக்குத் தெரிந்த சில குடியானவப் பெண்கள் அவளைக் கண்டு க்ஷேமம் விசாரித்தனர். அவர்கள் மனதில் யாதொரு சந்தேகமும் வராமலிருக்கும்படி தகுந்த விடையளித்து, முதல் வகுப்புச் சீட்டு வாங்கி வண்டியேறினாள், அவள் ஏறிய வகுப்பில் அவள் ஒருவளே இருந்தமையால், அவள் சாவதானமாக கடந்த இருபத்து நான்கு மணி நேரத்தில் நிகழ்ந்தவற்றை நினைக்க கூடுமாயிருந்தது.

வண்டி நகர்ந்தது. அப்போது தான் செல்வத்தை விட்டு வறுமைக்குப் போவதின் உண்மையவளுக்குத் தெளிவாய்த் தெரிந்தது. அன்றாடம் கஷ்டப்பட்டுழைத்து ஜீவனஞ் செய்ய வேண்டு மென்றுணர்ந்தாள். இல்லை, இல்லை! அவள் காதலனை நாடிப்போகிறாள்! அவனிகழ்த்தும் போரில் அவனுக்குதவியாய் நிற்கப்போகிறாள்! என்ன வித்தியாசம்! என்ன மாறுதல்! அவள் நிலைமையை நினைக்க அவளுக்கே சிரிப்பாயிருந்தது. தன் காதலனைக் கண்டு பிடித்து அவனை யணுகினால், அவன் என்ன சொல்வானோ? சொல்வதைச் சொல்லட்டும். அவள் அவனைக் கண்டதும், அவன் கரங்களைப்பற்றி, "காதலரே, உம்மைத் தேடி வந்திருக்கிறேன். ஏனெனில் உம்மைப் பிரிந்து என்னால் உயிருடன் இருக்க முடியவில்லை. ஆதலால் என்னை யேற்றுக் கொள்ளும்." என்றால் பாலசுந்தரம் என்ன சொல்லக் கூடும்?

(இன்னும் வரும்.)

சரக்குகளுக்கு உத்தரவாதம்.

வெளியில் வாங்குமுன் எங்களுடைய தினுசுகளையும் விலையும் பரிசோதித்து வாங்கினுல் லாபம் அடைவீர்கள்.

நாங்கள் கீழ்க்கண்ட சரக்குகளைச் சொற்ப லாபத்திற்குச் சப்ளை செய்து கொண்டு வருகிறோம். மதராஸ், ஆள்வார்பேட்டை, நாட்டுச் சேலைகள், மதுரை சேலைகள், கராச்சி கிளாவர் சரிகை போட்ட சேலைகள், மங்களூர் மனோகரமான தாவணிகள், சேலைகள், காஞ்சிபுறம், பெங்களூர் பட்டு சேலைகள், சேலம் வேஷ்டிகள், பட்டு மூடி வஸ்திரங்கள் பல கலர்களிலும், புதுச்சேரி சேலைகள், காசி சேலைகள், 50 ரூபாய் முதல் 1,500 ரூபாய் வரையிலும் பூரண சம்மத மடையும்படி வேண்டிய கலர்களிலும் அகல முழத்திலும் விலைகள் மிக சரசமா அனுப்பிக்கப்படும். ஒரு தடவை எங்களிடம் வாங்கினவர்கள் பிறகு மற்றவர்களிடம் வாங்கமாட்டார்களென்பது திண்ணம். ஆகையால் தங்களுடைய தேவைக்கு உடனே எழுதி உண்மையை பரிசோதித்துப் பார்க்கவும். விலை ஜாப்தா வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும். **எஸ். ஆர். பாலசாமி ஐயர் அண்ட் சன்ஸ்,**

மதுரை, காசி, ஜவுளி வியாபாரம், மதராஸ்.

S. R. Balasawmy Iyer & Sons,
The Premier Madura & Benares Cloth Merchants,
83, Nyneappa Naicken Street, Park Town, Madras.

வீரமாமுனிவர் ஔஷத சாலைப் பிரசுரம்.

வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரையின் சுருக்க வரலாறு.

இவ்வரிய மருந்தானது தமிழ் நாடெங்கும் மகா கீர்த்திபெற்று விளங்கியவரும், சதுரகராதி, தொன்னூல் விளக்கம், தேம்பாவணி முதலிய அருமையான காவியங்களை இயற்றியவரும், நாசகண்டம் சிந்தாமணி, குணபாடம் முதலிய வைத்திய நூல்களை ஆக்கியோரும் மகா பேரோங்கிய ஐரோப்பிய குருவுமாகிய "வீரமாமுனிவர்" சங். கோ. ஜு. பெஸ்கீ (The Revd. Father C. J. Beschi, S. J.) சுவாமிகளால் லோகோபகாரமாய் அருளப்பட்டது. இந்த மகா பேர்பெற்ற பண்டிதரால் தந்தருளப்பட்டதென்பதே இம்மருந்தின் உண்மை குணத்தையும் உயர்வையும் குறிப்பிக்கப் போதுமானது. இம்மருந்தை யாவரும் ஒரு முறையேனும் வாங்கிப் பரீக்ஷிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுக்கிறூர்கள். இதனுல் யாதொரு திரவியலாபம் பெறவேண்டுமென்பதல்ல; ஏழைகள் முதல் சகலரும் சுலபமாய்த் தங்கள் ரோகங்களைத் தீர்த்துக்கொண்டு சுகமாக வாழ வேண்டுமென்பதே இதைச் செய்தவரின் முக்கிய கருத்தென்பதை ஆன்றோரறியக்கடவர்.

100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றின் விலை ரூ. 1-0-0, தபாற்செலவு உட்பட ரூ. 1-4-0.

இம் மருந்தை யருந்தும் விதமும், அளவு அனுபானம் முதலிய சகல விவரங்களும் அடங்கிய பத்திரம் மருந்துடன் அனுப்பப்படும்.

டி. எம். மாணிக்கம் பிள்ளை,
ஷாப்பு வியாபாரம், போஸ்டு பாக்ஸ் நெ. 103,
பந்தர் தெரு, சென்னை.

தென்இந்திய கத்தோலிக் யூனியன் லிமிடெட்

யூனியன் அச்சுக்கூடம்.

[illegible]ர் செய்யப்பட்டது.

[illegible]ரோட், சென்னை.

[illegible]பந்தமான தர்ம கைங்கர்யங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்த அச்சுக்கூடத்தை ஆதரியுங்கள். இதன் மூலதனம் ரூ. 20,000. பங்கொன்றுக்கு ரூ. 10 ஆக 2,000 பங்குகளில், 389 பங்குகள் செலவாகியிருக்கின்றன. வரவுதொகை ரூ. 2,916. பங்கெடுக்க விரும்புகிறவர்கள் மேற்கண்ட விலாசத்திற்கு எழுதி விபரந் தெரிந்து கொள்ளலாம்.

"பொதுநலம்."

சந்தா விபரம்.	விளம்பர விகிதம்.
உள்நாடு—	ஜனன, மரண, விவாக அறிக்கை—
வருஷ சந்தா ரூ. 5.	10 வரிக்குட் பட்டால். 0-8-0
6 மாத ,, ,, 3	அதற்குமேற் பட்டால்.
வெளிநாடு—	வரி1-க்கு.0-2-0
வருஷ சந்தா ரூ. 6	
6 மாத ,, ,, 4	

மற்ற விளம்பர விகித முதலிய விஷயங்களுக்கு மனேஜருக்கு எழுதவும்.

ஆரோக்கிய தீபிகை.

சித்திர சகிதமாகச் சென்னையில் வெளிவரும் ஒரு மாதாந்த தமிழ் பத்திரிகை. இஃது தனது பேருக்கொப்ப ஆரோக்கியம், சுகாதாரம், பிரசவ முறைகள், முதற் சிகித்சை, சிசுசம்ரக்ஷணை முதலிய விஷயங்களை ஆடவருக்கும் பெண்டீருக்கும் போதிப்பது. இயற்கை முறைகளால் தேக சுகத்தைப் பாதுகாத்து, நோயணுகாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமெனப் போதிப்பது. அநேக பிரபல வைத்தியர்கள் ஐரோப்பியரும், இந்தியரும் இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்கிறூர்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானுல் "ஆரோக்கிய தீபிகை" என்னும் இப்பத்திரிகையில், நோயற்ற வாழ்வினுக் கவசியமான செய்திகளெல்லாம் இனிது வரையப் படுகின்றன. இதன் ஆசிரியர் டாக்டர் U. ராமா ராவ் எம். எல். சி. இதன் வருஷ சந்தா 1—8—0. இதன் பிரதிகளை விற்க வெளியூர்களில் ஏஜண்டுகள் தேவை. வேண்டியவர்கள் சென்னை, தம்பு செட்டி தெரு, 323 நெ. டாக்டர், யு. ராமா ராவுக்கு எழுதிக்கொள்ளவும்.

யூனியன் புஸ்தக சாலை.

"பொதுநலம்" ஆசிரியர்

ச.செல்வராஜு ரெட்டியார் அவர்கள் இயற்றிய நூல்கள்.

		ரூ. அ. ப.
(1)	சோமசுந்தரம் அல்லது சுகந்த விலாச இரகசியம் ...	1—0—0
(2)	மதிவீரன், ஒரு சிறந்த தமிழ் நாவல்	0-14—0
(3)	லாபம் என்ன அல்லது அர்ச். சவேரியார் நாடகம் ...	0—8—0
(4)	சுசீலா அல்லது கபாலமலைக் கள்வர்	0—6—0
(5)	காவலிட்டா அல்லது சூரிய ராஜகுமாரி	0—9—0
(6)	வேதானந்தம் அல்லது வெள்ளிச் சிலுவை, (புதிதாயியற்றிய இனிய செந்தமிழ் நாவல்)	1—0—0
(7)	அருள்சீலி (அச்சிலிருக்கிறது)	0-12—0

தபால் இலாகா ஸ்ரீமான் டேவிட் அவர்கள் இயற்றியது.

ஞானனந்தன் அல்லது பிரளயத்தில் கண்டெடுத்த பாலன் ...	0-12—0
தனபாக்கியம்	0-10—0
ஜெய சீலி	0—6—0

இதர புத்தகங்கள்.

மனோரஞ்சித மனோன்மணி	1—0—0
திருச்சிலுவையின் மான்மியம்	0—5—0
பரிசுத்த தீர்த்தம்	0—2—0
பலஹாரபோதினி (140 பலஹார தினுசுகள் செய்யும் விவரம்) ...	0—4—6

Printed at the Union Printing ,Works No. 40, Harris Road, Pudupet, and published by Mr. C. Mangalam Pillai, 40. Harris Road, Pudupet, Madras.